ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இராமாயணத்தில் ஓர் பாகமாகிய

...த்தியர் கலியாண நாடகம்

இது

திண்டிவனம் தாலுக்கா மஞ்சக்குப்பம்

உபாத்தியாயர்

கோ. இராஜகோபால நாயகர்

விருப்பத்தின்படி

சென்னைப்புரசை

பு. அ. வேங்கடேச நாயகர்,

அவர்களால்

இயற்றப்பட்டது.

சென்னை - சக்கரவர்த்தி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது

விலை] 1934 [அணா-6

189, தங்கசாலை தெரு, மதராஸ்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென் என்றால் பாடப்பெற்ற இந்த புலத்தியர் கலியாண மென்னும் புஸ்தகத்தை என்னுடைய அனுமதியின்றி யாரும் அச்சிடக் து அப்படி மீறி அச்சிடுவார்களானால் கவர்ன்மெண்ட் சட்டப் சகலநஷ்டத்திற்கும் உள்ளாவார்களென்று இதனால் அறிவிக்கப் றது.

இப்படிக்கு

பு. அ. வேங்கடேச நாயகர்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

புலத்தியர் கலியாண நாடகம்.

விநாயகர் துதி.

திருவருள் தழைக்கநாளும் திங்கள்மும்மாரிபெய்து
பெருமையாய்குடிஜனங்கள் பெரிதுமேவோங்கிவாழ
தருமங்கள்எந்தநாளும் தாட்சியில்லாதுவோங்க
அறுமறைவேள்வியோங்க ஐங்கரன்காப்புதானே.

இந்திரன் கவி.

விந்தையாய்பணிகள்பூண்டு வெகுவிதநடைநடந்து
சந்த்ரசேகரனடியை தாங்கியேசென்னிதன்னில்
முந்தியதவத்தால்தேவ ருலகத்தையாசுசெய்யும்
இந்திரன்கொலுவதாக எழிலுடன்வருகின்றேனே.

இந்திரன்வருதல்-தரு.

விந்தையாய் பணிகள்பூண்டு
பந்தியாய் அமச்சர்சூழ
இந்திரன் கொலுவதாகினேன்-வெகுசுந்தரமாக
இந்திரன் கொலுவதாகினேன்

சந்திரன்சேகரனடியை சந்ததம் துதிசெய்து
பந்தவினையொழிக்க பரமன்தனையேபாடி
[சுருள்.] சுந்தரவடிவுள அரம்பையூர்வசியுடன்
அந்தரமாதர்கள் விந்தையாய்நடித்திட இந்

ஆலவட்டம்கவரி நீளசாமரம் போட
கோலமானவசுர கூட்டங்கள் மனம்வாட
[சுருள்.] எக்காளம்பூரியும் எழில்முரசறைய
தக்கநாதசுர தாளமேளமுடன் இந்

ஆசிமறையோர்கூற நேசமந்திரிதாழ
வாசமிகுந்தமலர் மாலைமார்பினிலாட
[சுருள்.] ஆசையுடன்சபை நேசமதாகவே
வீசிநடந்துமே பேசிகம்பீரமாய் இந்

இந்திரன் கவி.

உன்னதபுத்தியுள்ள உயர்குணமந்திரிகேளாய்
நன்னயமாகத்தானே நமதுசெங்கோலுமோங்க
பன்னகருள்ளோர்வாழ பரிவுடன்மாரிபெய்து
என்னகரும்செழித்து இன்புடன்வாழ்கின்றாரா.

இந்திரன் வசனம்.

அகோவாரும் மந்திரி! (தானம் தவமிரண்டுந் தாங்காவியனுலகம்' வானம் வழக்காதெனின்') என்றுபெரியோர்கள் சொல்லியிருப்பதால் உலகத்தில் மாரியில்லாது தானமும் தவமும் நடவாது ஆகையால் நமது நாட்டில் மாதம்மும்மாரி பெய்து பயிர்களெல்லாம்செழித்து குடிகளும் க்ஷேமத்துடன் தானதருமங்களை நடத்தி மிகவும் சந்தோஷமாய் வாழ்ந்துவருகின்றார்களா சொல்லும்பிள்ளாய்மந்திரி.

மந்திரி கவி.

என்னுடையவரசேகேளாய் என்னகர்தனிலுமிக்க
பொன்மழைமாதம்மூன்று பொழிந்துமேபயிர்களெல்லாம்
தன்மையாய்குடிஜனங்கள் தாழ்வதுயில்லாமல்தான்
நன்மையாய்வாழ்ந்துதான தருமங்கள்நடத்துகின்றார்.

மந்திரி வசனம்.

அகோகேளும் தேவேந்திரமகாராஜனே நமதுநாட்டில்மாதமும் மாரிபெய்து பயிர்களெல்லாம் செழித்து குடிகளெல்லாம் சுகமாய் வாழ்வதுடன் ஆலயபூசைகள் தானதருமங்கள் நடத்தி மிகவும்சவுக்கியமாய் வாழ்கின்றார்களரசே.

இந்திரன் வசனம்.

மந்திரி நமதுநாட்டின் வளப்பத்தைபற்றித் தனித்தனியே விசாரிக்கின்றேன் சொல்லிவருவாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே சொல்லிவருகிறேன் கேளுமையா சுவாமி.

தேச விசாரணை.

இந்திரன் தரு.

மாதமும்மாரி மழைகளும்பெய்து
மகிழ்ந்துமேவாழ்கின்றாரா—மந்திரியே

மந்திரி தரு.

மாதமும்மாரி மழைகளும்பெய்து
மகிழ்ந்துமேவாழ்கின்றாரே—என் அரசே

இந்திரன் தரு.

ஆலயபூஜைகள் அனுதினம்குறைவின்றி
அன்பாய்நடக்கிறதா—மந்திரியே

மந்திரி தரு.

பூசைகளனுதினம் புரிந்துமேகுடிகளும்
புகழாய்வாழ்கின்றார்—என்னரசே

இந்திரன் தரு.

வேதியர்முறைப்படி ஓதியேவேதமதை
ஆதியைதொழுகிறாரா—மந்திரியே

மந்திரி தரு.

வேதியர்வேதமதை ஓதியேமுறைப்படி
ஆதியைதொழுகின்றார்—என்னரசே

மந்திரி வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனே ஒன்ருேடு ஒன்று குறைவில்லாமல் சகலஜனங்களும் மிகவும் சவுக்கியமாக வாழ்ந்துவருகின்றுர்கள் அரசே.

இந்திரன் வசனம்.

நமதுநாட்டில் ஒன்றும் குறைவில்லாமல் எல்லாம்சரிவாநடந்து வருகிரதேசரி ஆனுல்சற்று தர்பாரிடம் அமருவோம்.

மந்திரி வசனம்.

அப்படியேமகாபாக்கியம் அரசே.

பொது வசனம்.

இவ்விதமாக தேவேந்திரமகாராஜன் கொலுவிலமர்ந்திருக்கையில் பூலோகத்தில் புலத்தியமகாரிஷிபானவர் தவம்செய்ய வனத்தை நாடிவருகிறவிதங்காண்க.

புலத்தியர்வருதல் கவி.

தவமதில்மகிமையுற்று தாட்சியில்லாமல்வாழும்
பவமதையறியாசெல்வன் பத்தியேசிவன்மேல்கொண்டு
நவநிதிதன்னைவேண்டா நாயகன்புலத்தியன்தான்
அவமதைநாடிவந்து அன்புடன்தோன்றினேனே.

புலத்தியர்வருதல்-தரு.

புலத்தியமகாரிஷியும்வந்தேன்—தவத்தில்மிக்க
புலத்தியமகாரிஷியும் வந்தேன்
நலத்தில்மிகவுடைய குலத்துக்கதிபனுன
பலத்தில் தவவலிமை சலத்திரனிவனென்ன
[சுருள்.] பாதகமொழித்திடு தோதகமானவா
தீதிலாகுணத்தொழில் தன்னையேகொண்டவர்
பாசவலையைவிட்டு நேசமரன்மேல்தொட்டு
வாசமாயடியார்கள் நேசமதாய்கொண்டாட
[சுருள்.] சித்தர்கள் முத்தர்கள் பத்தர்கள் யாவரும்
சுத்தனுரிவரென பத்தியே செய்திட
கையில்கமண்டலமும் மெய்யில்வெண்ணீருடனே
பையரவமணிந்த பாமன்தனைபணிந்து
[சுருள்.] பாக்கியமுடன்தவம் தேக்கியேவனமதில்
நீக்கியேயிருளதை போக்கியேயழித்திட

புலத்தியர் வசனம்

நாமென்ன தவம்செய்ய வேண்டி வனத்திற்கு வந்தபடியால் நமக்குதகுந்த சவுகரியமானஇடம் இதுதான் இந்தவனத்தில் இனி தவம் செய்வோம்.

புலத்தியர் தவம்செய்தல் தரு.

தவமதைசெய்வேனே இந்தவனத்தில்
தவமதைசெய்வேனே
தவமதைசெய்யவே அவமதைநாடியே
பவமதையொழிக்கவே பரமனைப்பாடியே தவ

அரகரசிவசிவ சம்போமகாதேவா
உரகபூஷணனே உன்னருள்கோரியே தவ

நொந்தேனேநாளாக வந்தெனையாளாயோ
மைந்தனுனல்லவோ உந்தனைக்கோரியே தவ

தவம்செய்தல் கவி.

தேவாதிதேவனே மூவர்க்குமுதல்வனே திகட்டாதசெங்கரும்பே
ஏவாதுவினையதுயீட்டழியஉன்னருள் கிருபையதைதருகவேண்டும்
பாவமேளனைவந்துதுடராமல் கார்த்தருள்பரமனேபரமமூர்த்தி [கே.
தூவாதுமலர்தூவி திருத்தாளைப் பணிகுவேன் தூயசுடரொளிவிளக்

பொதுவசனம்.

இந்தவிதமாக புலத்தியர் தவம்செய்ய அத்தவத்தினல் உண்டாகிய சுவாலேயானது தேவலோகத்தை தகிக்க அதைதாளவசமல்லாமல் தேவேந்திரன் மந்திரியைப்பார்த்து சொல்லுகிறவிதங்காண்க

இந்திரன் கவி.

ஒப்பிலாமந்திரிகேளாய் உன்னதமாகவின்று
இப்புவிதன்னில்மிக்க யிருளதுசூழ்ந்துக்கொண்டு
தப்பியேபுவியில்யாரும் தங்கவேமுடியாமல்தான்
கப்பியேயிருக்குதையோ காரணமரிகிலேனே.

இந்திரன்வசனம்.

கேளாய்மந்திரி இன்றயதினம் என்னுளுமில்லாத புதுமையாய் அக்கினிசுவாலையானது வீசுகிறது இதன்காரணம் ஒன்றும்தெரியவில்லையே மந்திரி.

மந்திரி வசனம்.

கேளும்தேவேந்திர மகாராஜனே என்றுமில்லாதபடி நூதனமாய் இன்று இப்பேர்பட்ட கஷ்டமானது உண்டாகியிருக்கிறது அதன்காரணம் ஒன்றும் தெரியவில்லையே சுவாமி.

இந்திரன் தரு

என்னபுதுமையாகுதே எனதுமந்திரி
ஏதுபுதுமையாகுதே
முன்னம்முனிவராலே மோசம்வரலாச்சே
இன்னமவர்களாலே இடர்வருமோகாணேன் என்

பண்ணுள்தவத்தால்நம்மை பாதவிக்கவேசெய்து
என்னாளுமில்லாத இடாதை செய்கிறார் என்

காரும்ஜெகதீசனே இடர்தீர்த்தெனை
பாரும்ஜெகதீசனே பல்லுயிர்க்குநேசனே என்

இந்திரன் வசனம்.

ஆகாமந்திரி இது என்னபுதுமையாக விருக்கிறது என்னுமில்லாத அக்கினியானது வீசுகிறது என்னால்பொருக்கமுடியவில்லை இதற்கென்னசெய்யலாம் மந்திரி

மந்திரி வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனே நாமிதைகுறித்து இவ்விடத்தில் தவித்துக்கொண்டிருந்தால் ஒன்றும் ஏற்படாது நாம் சத்தியலோகம்சென்று சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவனிடத்தில் போய் சொல்லிக்கொள்வோம் வாரும்மகாராஜனே.

இந்திரன் வசனம்.

அப்படியே போகலாம் வாரும் பிள்ளாய் மந்திரி.

பொது வசனம்.

தேவலோகத்தில் உண்டான அக்கினிசுவாலை நீங்கும்பொருட்டு தேவேந்திரமகாராஜனும் மந்திரியும் சத்தியலோகம் போதல்.

இந்திரன் தரு.

ஆசைமிகுமந்திரியேநாமும்
பூசிப்போம்நான்முகன் தன்னையும்

மந்திரி தரு.

வாசம்பிரமலோகமதை
நேசமுடன்நாமும் கண்டிடவே

இந்திரன் தரு.

கூசாமலென் னுடனேநீயும்
கூடியேவந்திடும் மந்திரியே

மந்திரி தரு.

தாட்சியில்லாமலேராஜனே
தனையனும்வருகுவேன் உம்மோடு

தேவேந்திரன் தரு.

தாங்கமுடியாமல் உஷ்ணம்
ஓங்கிவளருதே என்னசெய்வேன்

மந்திரி தரு.

பாங்காய் நாமறியவதை
பகருவோம் சதுர்முகதேவரிடம்

தேவேந்திரன் தரு.

நீங்காதசெல்வம் பெறவேண்டி
நேரிழைசரஸ்வதி தாள்பணிவோம்

மந்திரி தரு.

வந்தோம்பிரமன்சபை நீயும்
வகையாய்தோத்ரம் செய்துக்கொள்ளும்

பொது வசனம்.

இந்தவிதமாக மந்திரியும் தேவேந்திரனும் சத்தியலோகம்வரும் போது சத்தியலோகத்திற்கு அதிபதியான பிரமதேவன் கொலுவாக வருகிறவிதங்காண்க.

பிரமதேவன் கவி.

தொண்டர்கள்தபத்திற்காக துரிதமாய்வரங்கள்தந்து
எண்டிசைதனிலேசர்வ ஜீவனைசிருஷ்டிசெய்தும்
அண்டர்களுடனேசீவ செந்துகள்தன்னைக்காக்கும்
கொண்டலாம்பிரமதேவன் கொலுவதைநாடிவாரேன்.

பிரமதேவன் தரு.

அறியபலபணிகள் துன்ன
சரிகைமாலையுமின்ன

அரிபிரமதேவர் வந்தேன்—உலகளிக்கும்
அரிபிரமதேவர் வந்தேன்
அரிபிரமதேவர்வந்தேன் கரியமால்தனக்குமைந்தன்
புரியும்சிருஷ்டிதொழிலை புகழாய்நடத்துகின்ற
[சுருள்.] புத்தியில் நத்திய சித்தர்கள் தன்மன
பத்தியறிந்துமே சித்தியளித்திட
உலகில்சர்வஉயிரும் உண்டாக்கியலோலன்
அலைகடலில்துயின்றோன் அளித்தருளியசீலன்
[சுருள்.] அண்டர்முனிவர்கள் எண்டிசையோர்களும்
தொண்டராய்வாடி தொழுதுகொண்டாட அரி

கல்விக்கரசியான கலைவாணிதனக்குநாதன்
பலவிதபணிகள்பூண்டு பாகாய்நடைநடந்து
[சுருள்.] உத்தம ரிவரென பத்தரும் புகழ்ந்திட
மெத்தசொகுசுள சித்திரவணிதுன்ன அரி

பிரமதேவன் வசனம்.

அடே மாதவா நாமென்ன சிருஷ்டிதொழிலை நடத்திவராநின்ற நான்முகம்படைத்த பிரமதேவன் வந்திருக்கிறோம் உலகத்தில் இன்னும் சிருஷ்டிக்கவேண்டியவைகளை சரிவரநடத்திவரவேண்டியதாகையால் நீ நமது அருகாமையில் இருப்பாய் நாம்சற்று தர்பாரிடமாய் அமருவோம்.

பொது வசனம்.

இவ்விதமாக பிரமதேவனுகப்பட்டவர் கொலுவாக வீற்றிருக்கும்போது தேவேந்திரமகாராஜன் பிரமதேவனிடத்தில் ஏதென்று சொல்லுகிற விதங்காண்க.

இந்திரன் தரு.

வந்தனம் தந்தோமையா உன் தாளினை
வந்தனம் தந்தோமையா வந்தனம்தந்தோம்
நாம் சிந்தைமகிழ்ந்தாலும் வந்

பிரமதேவன் தரு.

வாழ்குவாய் இந்திரனே நீடுழி நீ வாழ்குவாய் இந்திரனே
வாழ்குவாய் நீயுமே வையகமீதினில் வாழ்

இந்திரன் கவி.

சத்தியலோகமாளும் சதுர்முகதேவாகேளும்
உத்தமசித்தமுள்ள உம்பர்கள்நாட்டிலின்று
மெத்தவேதுடிக்கமேலும் வீசுதேஅக்னிதானும்
அத்தனேஅதன்விவரம் அறியவேசொல்லுவீரே.

இந்திரன் வசனம்.

சரணம்சரணமையாசுவாமி பிரமதேவனே தாங்கள் எறும்புக்கடை 84-லட்சம் கோடி சீவராசிகளை படைக்கும்படியான சிருஷ்டிகர்த்தாவாகயிருப்பதால் தேவலோகத்தில் உண்டாகியிருக்கும் தபாக்கினியானது எங்களால் பொருக்கமுடியவில்லை அந்ததபாக்கினியானது நீங்கும்வகையை அடியேனுக்கு தெரிவித்து என்னை காத்துரட்சிப்பீரையா சுவாமி.

பிரமதேவன் வசனம்.

கேளுமப்பா தேவேந்திரமகாராஜனே இதுகாலமில்லாமல அப்பேர்பட்ட அக்கினியானது எப்படிஏற்பட்டது அதனுல் நீ ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிருய் எல்லாம் நான் தீர்த்துவைக்கிறேன் நீ வருத்தப்படவேண்டாம் எழுந்திருமப்பா தேவேந்திரனே.

இந்திரன் தரு.

என்னசெய்வேன் ஏதுசெய்வேன்
பிரமதேவனே நாங்கள்
இந்தவிதியையாரிடம் சொல்வோம்
பிரமதேவனே

பிரமதேவன் தரு.

விதியென்னவந்ததப்பா இந்திரனேநீயும்
கதியென்றுவந்தடைந்தாய் இந்திரனே.

இந்திரன் தரு.

உம்பர்நாட்டில் அக்கினிசுவாலை பிரமதேவனே அது
உயிர்துடிக்கவாட்டுதையா பிரமதேவனே.

பிரமதேவன் தரு.

உம்பர்நாட்டில்அக்கினியும் இந்திரனே அது
உதித்தவிதம்சொல்லுவேன்கேள் இந்திரனே

இந்திரன் தரு.

இந்தவிதிவந்ததினால் பிரமதேவனே என்றால்
இனிபொருக்கமுடியாதையா பிரமதேவனே.

பிரமதேவன் தரு.

புலத்தியன்செய்யும்தவம் இந்திரனே உன்னை
கலைத்துமேவிட்டதப்பா இந்திரனே.

இந்திரன் தரு.

பத்திசெய்தேன்உன்பாதத்திற்கு பிரமதேவனே என்னை
பாதுகார்த்துஆண்டருள்வாய் பிரமதேவனே.

பிரமதேவன் தரு.

பத்தியதுசெய்ததினால் இந்திரனே நீயும்
சுத்தமுடன்வாழ்ந்திருப்பாய் இந்திரனே.

பிரமதேவன் வசனம்.

கேளுமப்பா இந்திரனே என்பாதத்தில் பணிந்தபடியால் உனக்குக்ஷேமம் உண்டாகும் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் எழுந்திருப்பாய் இந்திரனே.

இந்திரன் வசனம்.

சரணம்சரணமையாசுவாமி நான் அந்ததேவலோகத்தில் எப்படி இனி வாழ்ந்திருப்பேன் என்றால் தாளமுடியவில்லையே என்ன செய்வேன் சுவாமி.

பிரமதேவன் கவி.

அப்பனே இந்திரபூபா அலறிநீதுடிக்கவேண்டாம்
தப்பிலாதனமதாக தாழ்வொன்றும்வரவேயில்லை
இப்புவிமெச்சவேதான் இன்பமாய்தவத்தில்மிக்க
அப்புலத்தியமுனிவன் அருந்தவத்தால்வந்தவாரே.

பிரமதேவன் வசனம்.

கேளுமப்பா தேவேந்திரனே புலத்தியமகாமுனியானவர் செய்கிற தபத்தினால் உண்டாகிற அக்கினியானது அப்படி உன்னை கலைத்துவிட்டது அந்த அக்கினியானது கூடிய சீக்கிரம் நீங்கிவிடும் சீக்கிரத்தில் உனக்கு க்ஷேமம் உண்டாகும் நீபோய்வருவாயப்பா தேவேந்திரனே.

பொது வசனம்

இந்தவிதமாக பிரமதேவன் விடைகொடுத்தனுப்ப பழயபடியே இந்திரன் கொலுவிலமர்ந்து யோசித்துக்கொண்டிருக்க வழக்கம் போல் நடனமாதர் இந்திரன்சபையை நாடிவருகிறவிதங்காண்க.

ஊர்வசி கவி.

சித்திரபதுமைபோலே சீர்பணியலங்கரித்து
மெத்தவும்சாயல்கொண்டு மேனியும்மினுக்கிதேக்கி
சித்தசன் நூலைமேலும் சேரவேபேசிவந்து
நத்தியே இந்திரன்பக்கல் நங்கையும்வருகின்றேனே.

ஊர்வசிவருதல் தரு

கந்தமலரிலங்க
பந்துஸ்தனம்குலுங்க
வந்தேன் ஊர்வசிஎன்னும் மாது—நான்
வாரேன் ஊர்வசியென்னும்மாது
வந்தேன் ஊர்வசிமாது வகையாய்பணிகள்பூண்டு
இந்திராதிபூபன்சபை எழிலாய்நடனமாட
[சுருள்] தந்தெனதாவென தாளமுடனிடை
மெத்தவும்முழங்கவே மேதினிதன்னிலே
மெத்தமயிலெனவே சாயல்மிகவேகொண்டு
சித்தசன்தேவியைபோல் சேலைமிகவேபூண்டு கந்
[சுருள்.] சித்தர்கள் முத்தர்கள் பத்தர்கள் யாவரும்
நத்தியே எனைக்கண்டு சுற்றியேவந்திட கந்
அன்ன நடைநடந்து அடவாய்பணிகள்பூண்டு
மன்னர்மன்னவரெல்லாம் மகிழ்ந்து எனைதுடர்ந்து
[சுருள்.] பட்சமாய் என்மேல் இச்சையும் கொண்டவர்
லட்சையும் விட்டுமே அட்சனம்தொடரவே கந்

ஆசையுடனேதேவர் நேசமென்மீதில்கொண்டு
கூசாமல் எனைதேடி கூடியாடிடநாடி
[சுருள்.] வட்டமாய் என்னிடம் திட்டமாய் சுற்றிட
கட்டழகுள்ளவோர் கன்னிநானென்றுமே கந்

இராஜகோபாலன்நேசன் சென்னை திருவேங்கடேசன்
பேசும்பதத்தைபாடி பிரியமாய்சபையைநாடி
[சுருள்.] கற்றவர் மற்றவர் நற்றவர் யாவரும்
சுற்றமுடன் திரு வருள் தனைபெற்றிட கந்

பொதுவசனம்.

இவ்விதமாக இந்திரன்சபைக்கு ஊர்வசிவந்ததும் அரம்பையானவள் சபைக்குவருகிறவிதங்காண்க.

அரம்பை கவி.

வன்னமாய் பலபணியும் பூண்டுக்கொண்டு
வாகான மலர்மாலை மார்பிலாட
கன்னல்மொழி யாரணங்கு யிவளாமென்ன
காரிழையும் அன்னம்போல் நடைநடந்து
பன்னகரின் மன்னரவர் மெச்சநாளும்
பலவிதமாய் சரசமொழி தன்னைப்பேசி
முன்னவன்தன் மலரடியை துதித்துக்கொண்டு
மாதுதெய்வ ரம்பையவள் வருகின்றேனே.

அரம்பை வருதல் தரு.

சுந்திரவதனந்தன்ன
சந்திர ஆரமுமின்ன
வந்தேன் அரம்பை என்னும் மாது-வெகுலையிலாய்
வாரேன் அரம்பைஎன்னும் மாது
கந்தகளபம்பூசி சந்தலையிலாய்பேசி
முந்தகைகளைவீசி மோகசரசம்பேசி
[சுருள்.] சந்தனசவ்வாது வாசனைபூசியே
தந்தனதாவென தாளமும் பேசவே சுந்
இந்திரன்சபையில்நிதம் வந்துநடனம்செய்ய
பந்தவினையற்றேடும் பார்த்துமயங்கிட

[சுருள்.] அட்சனம் கண்டவர் பட்சமேகொண்டுதன்
லட்சையும்விட்டிட கச்சையும் கட்டினன் சுந்

வன்னசரசமுள்ள சின்னயிடையுடையாள்
கன்னல்விழிமாரனும் கண்டுநேசங்கொண்டாட
[சுருள்.] தங்கநகைகளும் எங்கும் சொலித்திட
தளதள வென்னிட சேலையுமின்னிட சுந்

சென்னை நகரில்வாசன் வன்னிகுல வேங்கடேசன்
நன்னயமாகபேசும் நவீனபதமேபாடி
[சுருள்.] நாட்டியமுடன்வெகு தாட்டியமாகவே
காட்டியேசுந்தர பாட்டுடன் ஆடியே சுந்

பொது வசனம்.

இவ்விதம் அரம்பை இந்திரன் சபைக்கு வந்ததும் மேனகை சபையைநாடி வருகிறவிதங்காண்க.

மேனகை கவி.

உத்தமசித்தமுள்ள உம்பர்நாட்டிலின்று
மெத்தவும்பணிசிங்காரி மேனகையென்னும்மாது
பத்தியேசிவன்மேல்கொண்டு பார்வையும்விரைந்துஓடி
நத்தியேஇந்திரன்பக்கல் நங்கையும்வருகின்றேனே.

மேனகை வருதல் தரு.

மேனகை மாதுவந்தேன்—வெகுசுந்தர
மேனகை மாதுவந்தேன்
மேனகைமாதுவந்தேன் வேணஉடையணிந்து
ஆனபணிசிங்கார மானநடையுடனே
[சுருள்.] வித்தையில் மெத்தவும் சித்தியே பெற்றவள்
நத்தியே சபைதனில் நிர்த்தனம் செய்பவள் மே

கண்டு எவரும்மையல் கொண்டுமயங்கிட
பண்டுவழக்கப்படி பார்வையும் நடித்திட
[சுருள்.] தேறிபரமதை கோரிமனதினில்
சீரியகுணமுடன் நாரியுமாடிட மே

காலில்தண்டைகொலுசு கைவளை தன்னொளியும்
ஏலவேஒட்டியாணம் இடையில்தகதகென்ன
[சுருள்] வச்சிர பதக்கமும் மிச்சம தாகவே
கச்சணிமார்பினில் பட்சமாய் ஆடவே மே

பொது வசனம்.

இந்தவிதமாக மேனகை தர்பாரிடம் வந்ததும் திலோர்தமை யானவள் இந்திரனிடம் வருகிறவிதங்காண்க.

திலோர்தமை வருதல் கவி.

பொன்னகர்தன்னில்மிக்க புகழ்பெரு இந்திரன் தன்னை
என்னகர்தன்னில்மிக்கேன் இன்பமேகொள்ளமேலும்
வன்னமாய்பதங்கள்பாடி வாகுடன்புகழேபெற்ற
நன்னரும்குணமேகொண்ட நங்கைதிலோர்தமையும்வந்தேன்

திலோர்தமை வருதல் தரு.

வந்தேன் திலோர்தமைமாது-நான்
வாரேன் திலோர்தமை மாது

வந்தேன் திலோர்தமையும் விந்தைபணியணியும்
சொந்தமுடனணிந்து பந்தமிகவேகொண்டு
[சுருள்.] சுத்தமாய்பத்தியும் நித்தமும் செய்துமே
பத்தனடிதனை மெத்தவும் துதித்துமே வந்

வடிவினில் மிகவுமே கெடிதனை பெற்றவள்
படியிலழகையாரும் பார்த்து மயங்கிட
[சுருள்.] துடியிடைதனிலொரு யணியதுமின்னவே
திடமுளசபைதனை அடைவுடன்நாடியே வந்

சேலையின் சோதியது மேலும் பளபளென்ன
மாலையழகதுவும் கோலமுடனிலங்க
[சுருள்] நாளும்புகழுடன் மேலும்துலங்கிட
காலமும்சிவன்தனை சாலவும்பணிந்திட வந்

பொது வசனம்.

இவ்விதமாக அரம்பாஸ்திரீகள் நால்வரும் இந்திரனை பணியும் விதங்காண்க.

ஊர்வசிவந்தனம்.

பாதம்பணிந்தேனையா ஊர்வசியாள்
பாதம்பணிந்தேனையா
பாதம்பணிந்தேனே பாதுகார்எந்தனை
பாதம்பணிந்தேனையா.

அரம்பைவந்தனம்.

வந்தனம்தந்தேன் இந்திரனே
வந்தனம்தந்தேன்
வந்தனம்தந்தேன் எந்தனையாளாய் சொந்தமுடனே
இந்திரதேவா வந்

மேனகை வந்தனம்.

வந்தனம்தந்தேனையா மேனகையாள்
வந்தனம்தந்தேனையா
வந்தனம்தந்தேன்நான் வந்துமேயாதரி
வந்தனம்தந்தேனையா

திலோர்த்தமைவந்தனம்

வந்தனமேதேவா வந்தனமே
வகையுடனே உனதுதிருமலரடியை ஏழைநானும்
தந்துமிகநான்பணிந்தேன்
தயவுடனேநீயருள்வாய். வந்

இந்திரன்தரு.

வாழ்வீர்மாதே சுகமாகயிப்போதே
ஆழிசூழுலகினில் அறிவையரேமேன்மையாய் வாழ்

ஊர்வசி நடனத்தரு.

மேரேமவுலாபுலா என்றமெட்டு

எந்தாய்உந்தனையே வந்துபோற்றினேனே எந்
வந்துஆதரிஎன்னையே உன்னைநொந்தேன்வெகுநாளையே
சிந்தைமகிழ்ந்தென்னை நீயும்யாளுவாயே என்

அரம்பை நடனத்தரு.

கந்தாகாருண்யா என்றமெட்டு.

கந்தமணிந்தவா காரும்எந்தனையே
நொந்தேன் உந்தனையே சிந்தைமகிழுடன் கந்

சொந்தமுடன்எனை வந்துஆதரி
பந்தவினையது மீளவே கந்

மூந்தநங்கையாள் வந்துபணிந்திட்டேன்
சந்ததம் எனைக்காரும். கந்

மேனகை நடனத்தரு

கண்டிநகர்தோட்டம் என்றமெட்டு

கண்டுசேவித்தேன் பண்டுவினைதனை
தண்டமுராமலே கொண்டுஅகற்றுமே
விண்டமொழிதனை கொண்டுபோற்றுவேன்
அண்டர்க்கதிபனே காருமே
கொண்டகருத்தினை கண்டுஆளுமே
தெண்டம்பலவேநான் செய்வனே. கண்

திலோர்த்தமை நடனத்தரு.

செந்தாழம்பூ — என்ற மெட்டு.

எந்தாய்நொந்தேன் உந்தன்கமலம் இந்திரபூபனே
வந்தாள் என்னைசொந்தமாக வந்தேன்உனைதேடியே
ஏழைமுகம்பார்த்து நீயேஇரங்கி எனையாளுவாயே
பிழைஎன்மேல்சொல்லவேண்டாம் பெம்மானே ஆண்டருள்வாய்

தேவேந்திரன் கவி.

சுந்தரநடனம்செய்யும் தோகையேகேளீர்நீங்கள்
முந்தியேநடனம்செய்த ஊர்வசியாளுங்கூடி
வந்துமேநடனம்செய்தீர் மகிட்சியுங்கொண்டேன்நானும்
சிந்தையில்தோன்றிற்றென்று தெரிவிப்பேன்கேளீர்நீங்கள்

தேவேந்திரன் வசனம்.

அகோகேளும் நடனமாதர்களே நீங்கள் நால்வரும் வழக்கம் போல் என்தர்பாரில்வந்து நடனம்செய்தீர் நான்மெத்தவும் சந்தோஷங்கொண்டேன் ஆனாலும் என்மனதில் ஒரு எண்ணமானது உண்டாகியிருக்கிறது அதுஉங்களால்தான் ஆகவேண்டியதாயிருக்கிறது அதைபூர்த்திசெய்வீர்களா பெண்களே.

நடனமாதர் வசனம்.

அகோகேளும் சுவாமி உங்கள்மனதில் உண்டாகி யிருக்கும் எண்ணத்தை தெரிவித்தால் உம்மிஷ்டபடியே பூர்த்தி செய்கிறோம் சுவாமி.

இந்திரன் தரு.

புலத்தியன்செய்யும்தபம் நலத்தைஎல்லாம்கொண்டு
போகுமேஎன்னசெய்வேன் மாதர்களே

ஊர்வசி தரு.

தபத்தால்உனக்கென்ன தாழ்வதுவந்தது
தயங்கியேன்வாடுகின்றீர் இந்திரனே

தேவேந்திரன் தரு.

எத்தனைநாளாக சுத்தன்தபம்செய்வது
என்னென்னவிளையுமோ மாதர்களே

அரம்பை தரு.

எத்தனைநாள்தவம் எண்ணியேசெய்தாலும்
குற்றம் உமக்கென்ன இந்திரனே

தேவேந்திரன் தரு.

எந்தவிதத்திலும் சுந்தரமாதர்களே
ஏய்த்திடவேண்டுமடி மாதர்களே

மேனகை தரு.

கர்த்தனே உமக்குள்ள கருத்தின்படியேநானும்
கலைத்திடுவேன் தபத்தை இந்திரனே

தேவேந்திரன் தரு.

பிரமன்தனைக்குறித்து பெரியதவமியற்றி
பிழையென்னசெய்வானோ மாதர்களே

திலோர்த்தமை தரு.

சித்தங்கலங்கவேண்டாம் சீக்கிரம்நான்சென்று
செயிப்பேன் புலத்தியனை இந்திரனே

ஊர்வசி வசனம்.

கேளுமையா தேவேந்திரனே உம்மிஷ்டப்படி அந்த புலத்திய ருடைய தபத்தை கலைத்துவிட்டுவருகிறோம் நீர் ஒன்றும் விசனப் படவேண்டாம் விடைதாருமையாசுவாமி தேவேந்திரனே.

இந்திரன் வசனம்.

அப்படியேபோய் அந்தபுலத்தியருடைய தபத்தை கலைத்து விட்டுவாருங்கள் மாதர்களே.

பொது வசனம்.

இந்தபிரகாரமாக இந்திரனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அரம்பாஸ்திரிகள் புலத்தியர் தபம்செய்யும் இடத்திற்கு வருதல்.

நடனமாதர் கவி.

இந்திரன்சொற்படிக்கு யாவரும்ஒன்றுகூடி
மந்திரபலத்தால்மிக்க மாமுனிபுலத்தியன்பாய்
வந்தனர்நடனமாதர் வகையுளபதங்கள்பாடி
அந்தரம்தன்னில்உள்ளோர் அதிசயம்கொள்ளவாரார்.

ஊர்வசி தரு.

தொண்டனும்புலத்தியனும் பண்டுநாளாய்செய்யும்-தப
சாலைக்கு—பூஞ்-சோலைக்கு

அரம்பை தரு.

பெண்டுகள்நால்வரும் கூடிகண்டு அவரிடம்-பேசி
கலைக்கவே—தபம்—குலைக்கவே

மேனகை தரு.

தேவர்களிடர்தனை பாவைகள்நாம்தீர்க்கவேண்டி
வந்தோமே-மனம்—நொந்தோமே

திலோர்தமை தரு.

நேசம்கொண்டுநம்மேலவர் ஆசைவிண்டுமோகம்கொள்ள
செய்வோமே-மனம்-உய்வோமே

ஊர்வசி தரு.

இந்திரன்தன்வார்த்தைபடி வந்தோம்புலத்தியரை
ஏய்க்கவே-மனம்—சாய்க்கவே

அரம்பாஸ்திரிகள் வசனம்.

நாமென்ன இந்திரன் சொற்படி புலத்தியர்தபச்சாலைக்கு அருகாமையில் வந்துவிட்டோம் இனி ஒவ்வொருவராக அவருக்கு அருகாமையில்போய் நல்ல கீதங்களைப்பாடி அவர்மனதை வேறுபடுத்தி அவர்தபத்தை குலைத்துவிடவேண்டும் ஆகையால் நீங்கள் எல்லாம் ஒருபுரமாய் இருங்கள் ஊர்வசிபோய்வரட்டும்.

அரம்பை வசனம்.

அடீ ஊர்வசி நீமுதலில்போய் அந்தபுலத்தியருடைய மனதை கலைத்துவிட்டு வருவாயடி.

ஊர்வசி வசனம்.

அப்படியே நான் முதலில்போய அந்தபுலத்தியருடைய தபத்தை குலைத்துவருகிறேன் அம்மா.

பொது வசனம்.

ஊர்வசிதனியேவந்து புலத்தியரிடம் பலகீதங்களைபாடி அவரை தொந்தரைசெய்தல்.

ஊர்வசி வசனம்.

சுவாமி புலத்தியமகாரிஷியே எழுந்திரும் என்ன இது பேசவில்லையே சரி இருக்கட்டும் நாம்போவோம்.

ஊர்வசி தரு.

சாமியுந்தன் மோககாந்தி
சரசமாக தைக்குதே
சரசமாட வருவாய் நீயே
சங்கைதங்கி யோடுதே
நேமிதொட்ட திருவரங்கர்
நீள்புவன வாசலில்
நடனம்செய்யும் ஊர்வசியாள்
நாளுமென்னைக் கூடுமே
எந்தன்மோகம் தீரநீரும்
எழுந்துவார்த்தை யாடுமே
நத்திஉன்னைவேண்டுகின்றேன்
நங்கையாளின் னேசமே

ஊர்வசி வசனம்

ஆ ஆ என்னதபமிது மகாதபச்சிரேட்டர் போயிருக்கிறதே நாம்வந்த அரவம் கேட்டும் சற்றும் மனமானது மாற்றமடையவில்லையே ஆனாலும் இருக்கட்டும் பார்ப்போம்.

ஊர்வசி தரு வேறு.

சாமியுந்தன்சரசம்தன்னைநாடி-இந்த
நங்கையாளும்வந்தேனுன்னை தேடி
பாசமுடன் நேசம்வைத்து ஆசையுடன் என்னைவந்து
சேரும்—என்னை—கோரும்
வாலபருவமுள்ளமாது—உன்னை
வந்துபணிந்தேன் விடைஓது
சாலகிருபையுள்ள கோலவசீகரனே என்
சாமி—எந்தன்—காமி
சித்தசன் இன்பரச நூலை—அதை
சிந்திப்பேன் நாளுமெந்தவேளை
சீக்கிரம் எந்தனுடன் பாக்கியமுடன் எழுந்து
சேரும்-என்னை-பாரும்
சந்தோஷமாகவென்னைக்கூடி-சாமி
சரசசல்லாபமாக ஆடி

ஜாலம்செய்யாமலிந்த காலம்எனையேகூட
வாரும்-எனை-பாரும்
மோகனசரசவினோதா-எந்தன்
மோகத்தைநீக்கவொண்ணாதா
நாடிஉன்னிடம்வந்தேன் மோடிசெய்வதழகோ
நாதா-பிரக்-யாதா
சென்னைநகர் வேங்கடேசன்பாட்டு-சற்று
சித்தமதில்நீயுமதைகேட்டு
சீக்கிரம் எந்தனைக்கூட பாக்கியமிதென்றே ஓடி
வாராய்-முத்தம்-தாராய்

ஊர்வசி வசனம்

ஆகா என்ன நூதனமாக விருக்கிறதே நாம் இவ்வளவுநேரம் ஆடியும் பாடியும் அவர் திரும்பிக்கூட பார்க்க வில்லையே இதற் கென்ன செய்யலாம் வேறுவிதமாய் பாடிப்பார்ப்போம்.

ஊர்வசி தரு வேறு

வாட்டமுடன் இருப்பதேனோ
வார்த்தைபஞ்சமோ-ஒரு-வார்த்தைபஞ்சமோ
(தொகை) நாயகனேஎன்மேல் மோடியேனோ
நங்கைஎன்னைகார்க்கொணாதா வாட்

நாட்டமுடன்வந்தேன்உன்மேல்
நங்கையானுமே-இந்த-நங்கையானுமே
(தொகை) சரசசல்லாப சங்கீதஞான
சடாதரியே இத்தருணம் அடியாளுக்கு வாட்

மோகமது செங்கைதங்கி
மீறியோடுதே-அய்யோ-மீறியோடுதே
(தொகை) அய்யனேஉமது பாதாரவிந்தமதில்
அடியாள் பணிந்தேன்

ஊர்வசி வசனம்.

ஆகா என்னயிது நாம்பாடுவதையும் ஆடுவதையும்கொஞ்சமும் கவனிக்காமல் ஒரேமவுனமாக விருக்கிறார் கல்லாயிருந்தால் மூச்சு விடுமே என்ன ஆச்சரியம் இதுவரையில் இப்பேர்ப்பட்ட தபசியை

பார்த்ததேயில்லையே இனி நம்மால் ஒன்றும் முடியாதுபோலிருக்கிறதே என்ன ஆச்சரியம்.

அரம்பை வசனம்.

என்னடிதங்காய் என்ன சும்மா நிற்கிறாய் தபச்சிரேட்டர் என்ன சொன்னார் சொல்லுமம்மா.

ஊர்வசி வசனம்.

அடி அக்கா என்னால் ஒன்றும் முடியாது நான் எவ்வளவோ சாமர்த்தியமெல்லாம் செய்துபார்த்தேன் ஒன்றும் பிரயோசனப்படவில்லை நீ வேண்டுமானால் போய்பார்த்துவருவாய்.

அரம்பை வசனம்.

ஊர்வசி நீ சற்று விலகியிரு நான்போய் அந்த தபசியை மயக்கி தபத்தை குலைத்துவிட்டுவருகிறேன்.

ஊர்வசி வசனம்.

அப்படியே போய்வருவாய் அக்கா.

அரம்பை தரு.

மன்னன்ராஜகோபாலன் இன்னம்வரக்காணேன்
மாதுநான் என்னசெய்வேன்
அங்கம்துடிக்குதே அரைநிமிஷம்தாளேனே
அடியாள்மோகம் தீருமையா
சோதனையோ மதன் வாதனை தாளேனே
சோதிப்பதழகாமோ சுவாமி
பாதகன்மலர்கொண்டு தூவுகிறான் என்மேல்
பாவிநான் என்னசெய்வேன்
சோலைக்குயில் கூவுதே மாலைதென்றல்தாவுதே
சொக்குதே என்மனம் சுவாமி
வாட்டம்தீர்க்குகன்மேல நாட்டம்கொண்டுமேனை
வதைக்கிறீர் என்ன ஞாயமோ

அரம்பை வசனம்.

ஆகா என்ன தவமிது நம்மை சற்றும் கவனிக்கவில்லையே தங்கை ஊர்வசி சொன்னது சரிதான் இருந்தாலும் இவரை விடக்கூடாது பார்ப்போம்.

அரம்பை வேறுதரு.

தானேனடா சாமி நிமிஷமினி
தானேனடா சாமி

பஞ்சபாணன் என்மேல மலர்கொண்டு தூவுகிறான்
தஞ்சமென்றுவந்தேன் தடைசெய்யலாகாது தா

தென்றல்மிகவீசுது தேமனும்மான்குது
தேவியின்மனமது தியங்கித்துடிக்குது தா

அண்டிவந்த என்னை ஆதரிக்காவிட்டால்
கொண்டமோகமது குலைக்குமுன்தாபத்தை தா

பார்க்குளெவருமென்னை பார்த்துமயங்கிட
ஏற்குமோஉனக்கிது எழுந்துஅணையவாரும் தா

பாக்கியம்உமக்கிது யோக்கியமாகுமையா
பாவைஎந்தனைகூட மேவிஎழுந்துவாரும் தா

அரம்பை வசனம்

அடிஊர்வசி நீசொன்னது சரிதான் இவர்வெகு சாமார்த்திய முள்ளவர் போலிருக்கிறது நான்எத்தனையோ தபசிகளை பார்த்தேன் இவரைப்போல் இந்தஉலகத்திலேயே கண்டதில்லை என்னதபம் என்னதபம் கிட்டவேபோகமுடியவில்லையே சரி இருந்தாலும் பார்க்கிறேன்.

அரம்பை வேறுதரு.

மோடிசெய்வதுதகாது-எந்தன்
மோகமது பொல்லாது

நாடிஉன்மேல்மையலால் தேடிக்கொண்டுமேவந்தேன்
நாதா—வேத-போதா
கொஞ்சுமொழி அஞ்சுகம்போல்நாடி—உனை
கூடநினைந்துமனம்வாடி

கோரிவந்தேன்உன்னையே நாரிஎனைக்கைவிட
போமோ—இது—ஆமோ
பார்க்குளெவரும்மெச்சும் போதா-இந்த
பாவைஎன்மேலுனக்கு வாதா

பாக்கியமடைய நல்லசிலாக்கிய மாகசேரும்
பாதா—என்—நாதா
மோகனசரசமுள்ள மாது-எந்தன்
மோகம்தணியும்வகை யோது
சாதகமிதுவென்னவோ பாதகமாகுமையா
பாரும்—என்னை-சேரும்

அரம்பை வசனம்.

அடி-ஊர்வசி இனிஎன்னுல் ஒன்றும்முடியாது அவரென்ன கல்லுக்கொப்பாய் இருக்கிறார் சற்றும் அசையவுமில்லை இப்பேர்ப் பட்ட தபசியை நான் கண்டதேயில்லை இனிநான் அவரிடம் போகேன்.

மேனகை வசனம்.

அக்கா நீ ஒன்றும் விசாரப்படவேண்டாம் நான் எப்பேர்பட்ட முனிவராளுலும் போய் ஜெயித்து வருகிறேன்

அரம்பை வசனம்

அடிதங்கா நீஅப்படி போனுல் வெகுஜாக்கிரதையாக போக வேண்டும் அவர்சாமானியமானவரல்ல ஆகையால் ஜாக்கிரதையாக போய்வருவாய்.

மேனகை வசனம்.

அப்படியே சாக்கிறதையாக போய்வருகிறேன்.

மேனகை தரு.

நேசாஎன்னுடன்கூடி நீயுமேயின்பம்நாடி
வாசமாய் ஆடிடுவோம் வாராய்
நேசமாய் கூடிடுவோம் நேராய் நே

பேசாமலிருப்பதால் கூசுதே என்மனம்
ஆசையும்கொண்டுவந்தேன் நானே
மோசமேசெய்யவேண்டாம் கோனே நே

மேனகை வசனம்.

என்ன ஆச்சரியமா யிருக்கிறது இவர் ஒன்றும் பேசவில்லையே இருந்தாலும் சரிபார்ப்போம்.

மேனகை வேறு தரு.

எழுந்துநீர்வாரும்—எந்தன்முகம்பாரும்
பழுதுஒன்றுமில்லாமலே பாவைஎன்னைக்கூடிடவே
பட்சமுடன்நீயும்ஓடி இட்சணமேவந்திடுவாய் எழு

ஜாலமிதனைவேண்டேன்- இக்காலமிதனைதாண்டேன்
நாளுமுன்னைக்கூடிடவே நங்கைமோகம்கொண்டுவந்தேன்
தாளேனினிஎன்னையிப்போ தள்ளிவிடபோமோநீயும் எழு

சென்னைநகரின்வாசன்—திருவேங்கிடுவெங்கடேசன்
பேசும்பதம்தன்னைப்பாடி பிரியமாகஉன்னைநாடி
பேதைநானும்வந்தடைந்தேன் பிரியமுடன்கூடிடுவாய் எழு

மேனகை வசனம்.

அடடா என்ன விநோதமாக விருக்கிறதே எந்தவிதமாக பாடி னாலும் நம்மை கவனிக்கவில்லையே இவருக்கு இவ்விதமாகப் பாடக் கூடாது சரி இன்னொருவிதமாய் பாடிப்பார்ப்போம்.

மேனகை தரு வேறு.

மோடியதுசெய்யவேண்டாம் மோகனசிங்காரனே
மோகமதுதாளேனையனே—என் துய்யனே
மோகமதுதாளேனையனே

மோடிசெய்யாமல் ஓடியேவாராய்நாடினேன்உன்னை நாதனேஎன்மேல்
தீராதமோகமதால் நேராகவந்தேன்நான்
வாராய்நீஎன்னைச்சேரவே—என்னையனே
வாராய்நீ என்னைச்சேரவே
வந்துமேமுத்தம்தந்துமேஎந்தன் சிந்தைமகிழ செய்குவாய் கோனே

மேனகை வசனம்.

அக்கா இனி என்னால்முடியாது அவர் கல்லாகபோய்விட்டாப் போலிருக்கிறது எனக்கு தெரிந்தவரையில் என்னென்னமோசெய் துபார்த்தேன் ஒன்றும் முடியவில்லை.

திலோர்தமை வசனம்.

அக்கா என்னை அனுப்பினால் நான்போய் அந்தமுனிவரை ஏய்த்துவிடுகிறேன் அவருக்குஇந்தவிதமாய்பாடினால்முடியாது அவரை நல்ல இசையோடும் பாடிக் கலைக்கவேண்டும் நான்போய்வருகிறேன்.

ஊர்வசி வசனம்.

தங்கா அப்படியே நீ போய் எந்தவிதத்திலாவது அந்தமுனி வரை ஜெயித்து விட்டுவர வேண்டியதுதான் சீக்கிரம் போய்வருவா யடி.

திலோர்தமை தரு.

ஆனபொன்சிங்காரமானமாது-என்னை
ஆதரிப்பாய்நீயே வெகுசாது
ஞாயந்தானோ ஞாயந்தானோ
நங்கையாள்வாடுவது ஞாயந்தானோ ஆன

எந்தனின்மோகமது தாளேனேயினி
வந்தெனை சேராவிடில்பழிதானே
சொந்தமாக இந்தநேரம்
வந்துஎனைநீ சேர்ந்திடுவாய் ஆன

திலோர்தமை வசனம்.

ஓகோ என்னவிது நாம்வந்து முதல்முதல் பாடும்போதே அவர் மயங்கி வீழ்ந்துவிடுவாரென்றல்லோ நினைத்தேன் சும்மா கல்லைப் போல் இருக்கிறாரே நமது அக்காள் சொன்னது சரியே நாம்லே சாய் நினைத்துவிட்டோமே சரி இருந்தாலும் பார்ப்போம்.

திலோர்தமை வேறுதரு.

தவமுனியேவாரும் என்னைதயவுடனேசேரும்
அபயமென வந்தடைந்தேன்
ஆதரிப்பதுன்கடமை
சமயமென்னைசேராவிடில் தையல்நானும்தாளேனையா
மோகமிகமீறி நான்போகமுடன்கூடி
உல்லாசமாகநீயும் சல்லாபம்தன்னைக்கோரி
நில்லாமல்ஓடிவந்து நேரிழையைகூடிடுவாய் தவ

திலோர்த்தமை வசனம்.

என்ன இந்தபாட்டினாலும் ஒருபிரயோசனையும் கிடைக்க வில்லை இவர் என்ன மகாமுனியாயிருக்கிறாரே சரியிருந்தாலும் விடு வதில்லை பார்க்கிறேன்.

திலோர்தமை வேறுதரு.

மாமயிலோமையலாகி ஓடிவந்தேன்
தாமதமேசெய்யவேண்டாம் மோடியேனோ
தாராய் இன்பம் பாராய்என்னை
நேராய்வந்து நீயுமாளாய் மாம

மோகமதுமீறி என்னைவாட்டுதையோ
யோகனேவந்து அதையோட்டுமையா
போகம்தாராய் யோகமாகும்
வேகமாகவந்துசேரும் மாம

அய்யய்யோ அரைநொடியும்தாளேனையா
மெய்யனே என்னைவந்துஆளுமையா
வேதன்விதி யேதோகாணேன்
சூதோமாய வாதோயிது. மாம

திலோர்தமை வசனம்.

அடி அக்கா என்னால்முடியாதுமுடியாது நான் உலகத்தில் இப்பேர்ப்பட்ட முனிவரை பார்த்ததேகிடையாது எந்த எந்தவிதமாக ஜாலவித்தையைப்போல் மாறிமாறிசெய்தாலும் கொஞ்சமும் மதிக்கவில்லை இவரைஜெயிக்க நம்மாலுமாகாது மற்ற எவர்களாலுமாகாது எப்படியாவதுபோங்கள்.

ஊர்வசி வசனம்.

அடிதங்கா அப்படி அல்ல அது என்வாழ்நாளில் எத்தனையோ தபசிகளை பார்த்திருக்கிறேன் இவரென்ன அப்பேர்ப்பட்ட சாமர்த்தியமுடையவர் [விசுவாமித்திரர்] என்பவர் மிகவும்தேர்ந்தவர் அவர் தபம்செய்யும் தபச்சாலண்டையில் யாரும்போகவேமுடியாது அப்பேர்பட்ட முனிவரையே ஏமாற்றிவிட்டோம் இவர் எம்மாத்திரம் நான்போய் அவர் தபத்தை எப்படியாவது கலைத்து விடுகிறேன் பாருங்கள்.

ஊர்வசி கவி.

பித்தனாருளால்தெய்வ பெண்களாய்பிறந்தநாளாய்
எத்தனை தவத்தைக்கண்டோம் எழிலுடன்புவியில்நாளும்
எத்தனைமுனியைகண்டோம் இவரென்ன அவர்கள்தம்மில்
சுத்தனார்ஒருவர்தானே சுருக்கினில்ஜெயிப்பேன்நானே.

ஊர்வசி வசனம்.

கேளும் அக்கா அரம்பையே நாம் உலகத்தில் பெண்களாய் பிறந்தநாளாய் எவ்வளவோ முனீஸ்வரர்களை கண்டிருக்கிறோம் அதைப்போலொருவர்தானே இவர் நீங்கள் விசனப்படவேண்டாம் நான்கூடியசீக்கிறம் எந்தவிதமாவது அந்த முனிவரை ஏய்த்துவிடுகிறேன் பாருங்கள்.

அரம்பை வசனம்.

எப்படியாவது அவரை ஏமாற்றிவிடவேண்டும் அது மிகவும் நல்லது போய்வருவாய்.

ஊர்வசி தரு.

நாயகனே உன்னைநானே நாடிவந்தேன்
நங்கைஎன்னை கூடிடுவாய் மோடியேனோ
நாதா வேதபோதா யிதோ
சூதோமாய வாதே யிது நாய

எந்தன்மோகம்பொல்லாது தேடிநானே
வந்தஎன்மேல்வஞ்சமேனோ சிருவன்நானே
நாடிவுனை தேடிவந்தேன்
கூடிஎன்னுடன் ஆடவருவாய் நாய

பாரிலெனக்கதிகமான மாது ஏது
பாவையாளதையறியநீயும் ஓது
பட்சமாக இட்சணம்நீ
கட்டியென்னைச் சேர்ந்திடுவாய் நாய

நேறமிகஆகுதையா ஜாலம்வேண்டாம்
இந்நேறம்என்னைசேராவிடி லாவிகொண்டேன்
துணையெனக்கு அணைவருவாய்
பணைத்திரன்புயம் களைத்துவிழுகுது நாய

ஊர்வசி வசனம்.

அரம்பா என்ன ஆச்சரியம் பார்த்தனையா நாம் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் ஒன்றும் பிரயோசனப்படவில்லை இனி என்னசெய்யலாம் இருந்தாலும் இருக்கட்டும் நான்போய் அவர்கையைப்பிடித்து இழுத்துவருகிறேன்.

பொது வசனம்.

இந்தவிதமாக ஊர்வசியும் மற்றபெண்களும் புலத்தியமகாரிஷியை கையைப்பிடித்து இழுத்துவர அப்போ புலத்தியர் தவமானது கலைத்து கண்விழித்துபார்த்து ஏதென்று சொல்லுகிறவிதங்காண்க.

புலத்தியர் வசனம்.

ஆகா என்னயிது நாம் தவம்செய்யும் இடத்தில் யாரோபெண்கள்வந்து நம்மை தொந்தரைசெய்து தபத்தையும் கலைத்துவிட்டார்கள் யார் இவர்கள் ஏன் இங்குவந்தார் என்ன ஆச்சரியம் நம்முடைய தவத்தையும் கலைத்தார்கள் அல்லவா சரி பார்ப்போம்.

புலத்தியர் கவி.

சினத்துடன்சுற்றும்நோக்கி தீவினையேதோவென்று
மனத்தினில்காரியங்கள் மாறுமேபட்டதாலே
கனத்துமேபுகைந்துகாரி கண்களை திறந்துபார்த்து
தனக்கிதுவந்தவாறு தகாதெனமொழிவான்மேலும்.

புலத்தியர் தரு.

ஏதுக்காகயிங்குவந்தீர்—எனக்கு
இடாதுசெய்துமே நின்றீர்
பாதகம்செய்தீரே பாவிகாள்நீங்களும்
ஓதுவீர்வந்தவிதம் உண்மைதெரியநீரும் ஏது

புலத்தியர் வசனம்.

ஓகோ பெண்களே நீங்கள்யார் என்னகாரணமாக இங்குவந்தீர் உங்களால் என்தபம் கலைந்துவிட்டது இங்குவந்தகாரணத்தை சீக்கிரம் தெரிவிப்பீர் பெண்களே.

அரம்பை தரு.

ஏதுக்காகயிங்குவந்தீர்-என்று
எங்களைகேட்டுமே நொந்தீர்
வேறேஒன்றுமேயில்லை வித்தகாஉந்தனை
சேரஎண்ணம்கொண்டு செல்வியர்வந்தோமே ஏது

அரம்பை வசனம்.

கேளுமையா தபச்சிரேட்டரே தாங்கள் எங்களை என்னகாரணமாக இங்குவந்தீர் என்றுகேட்டீர்கள் வேறே ஒன்றுமில்லை தங்களைக்

கூடி எங்களுக்கு உண்டாகியிருக்கும் மன்மத வேதனையை தீர்ப்பீர் என்று உம்மிடம் வந்தோம் சீக்கிரத்தில் எங்களை கட்டிச்சேரும் மகாரிஷியே.

புலத்தியர் தரு.

ஓகோயிதுவென்னஞாயம்—நீங்கள்
உரைப்பதும் வெகுமாயம்
பேய்கொண்டாலுமண்ணில் பெண்கொள்ளலாகாதென
பேசுதேநீதிஞாயம் கூசுதேஎன்மனம்

புலத்தியர் வசனம்.

ஆகா இதுஎன்னஞாயம் என்தபத்தைகலைத்ததும் மல்லாமல் உங்களைசேறும்படியாக சொல்லுகிறீர் நல்லஞாயந்தான் சரி சரி "சிற்றினமஞ்சும் பெருமைசிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்துவிடும்" என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள் ஆதலால் பெரியோ ரியல்பு சிறியவினத்திற்கஞ்சும் சிறியோரியல்பு சிறியவினத்தை சுற்ற மாக கொள்ளும் அதனால் தன்னறிவு வேறுபடும் பலவிததுன்பங் கள் உண்டாகும் அறிவுடையார் அதைவிரும்பலாகாது நீங்கள் சீக் கிறம் இதைவிட்டு ஓடிப்போய்விடுங்கள் இல்லாவிட்டால் உங்க ளுக்கு அதிககஷ்டங்கள் உண்டாகும் சீக்கிரம் ஓடிப்போய்விடுங்கள் பெண்களே.

அரம்பை வசனம்.

பேஷ்பேஷ் நல்லசாஸ்திரமிது உலகத்தில் பெண்ணில்லாமல் என்ன காரியம் நடக்கும் எத்தனைமகான்கள்எல்லாம் பெண்களுக்கு அடிமையாக விருக்கிறார்கள் என்னஇது ஞாயமல்லாத காரியம் சொல்கிறீர்.

அரம்பை தரு.

சாஸ்திரம்கண்டவெகு பேர்கள்—எங்கள்
சரசமதிலடைவார்கள்
மண்ணதில்மெத்தமுனிகள் மாளாதபங்கள்செய்தார்
கண்ணில்கண்டாலெங்களை கட்டிஅணைகுவாரே

அரம்பை வசனம்.

கேளுமையா தபசியே நீர்வெகுவாய் சாஸ்திரம் கண்டவரைப் போல் பேசுகிறீர் எங்களுக்கும் அதற்குமேல்சாஸ்திரங்கள் தெரியும் நான் சொல்லுவதைசற்று கவனித்து கேளும் உலகத்தில் 'புகழ்புரிந் தில்லிலோர்க்கில்லை யிகழ்வார்முன்னேறுபோற் பீடுகடை' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடியால் கற்பென்னும் கீர்த்தியை விரும்பிய மனையவளில்லாதவற்கு தமது பகைவர்முன் சிங்கம்போ லும் பெருமிதநடையில்லை என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன ஆகையால் உடனே ஒடிவந்து எங்களை கூடிசுகித்து ஆவல்தீர்க்க வேண்டும் எங்கள் ஆயுள்காலத்தில் உங்களுக்கு மேலான எத்தனை யோ முனீஸ்வரர்களை கண்டிருக்கிறோம் அவர்களெல்லாம் மகாதவ வலிமைபெற்றவர்கள் அவர்கள் எதிரிலேயே போகமுடியாது அப் பேர்பட்ட ரிஷிகளும் எங்களை கண்ணால்கண்டுவிட்டால் எப்பேர்ப் பட்ட தபம்செய்திருந்தாலும் அதைவிட்டு எழுந்து ஓடிவந்து எங் களை கூடிச்சுகியாம லிருக்கமாட்டார்கள் ஆகையால் தயவுசெய்து எங்களைச்சேர்ந்து மன்மதவேதனையை தீர்த்து எங்களை காத்து ரட் சிப்பீரையா சுவாமி முனிநாதரே.

புலத்தியர் வசனம்.

சரி சரி இப்படி எல்லாம் ஞாயமாக சொன்னால் இவர்கள்கேழ் க்கமாட்டார்கள் இவர்களை சீறி விறட்டவேண்டும் அதுதான் சரி யானஞாயம்.

புலத்தியர் தரு.

இப்படிநீங்கள்சொல்ல ஆகுமோ—என்னை
கைப்பிடிசெய்யஉம்மால் போகுமோ
தப்பிலிநாய்களே தட்சணமிதைவிட்டு
ஓப்பியேபோகாவிட்டால் உங்களுயிர் தப்பாது இ

புலத்தியர் வசனம்.

அடிபெண்களே இதுசமயம் இதைவிட்டு போகாவிட்டால் உங்களுயிர் தப்பாது உங்களை சபித்துவிடுவேன் சாக்கிரதையாக ஓடிப்போய்விடுங்கள் பெண்களே,

ஊர்வசி தரு.

மோடி செய்வதுஎன்ன ஞாயமோ—எங்கள்
மோகம்தவிர்ப்பதும் பாரமே
பாதகம்நேர்ந்திடும் பதைக்குதே எங்கள்மனம்
சோதனைசெய்யவேண்டாம் சேரவாரும்சுவாமி

ஊர்வசி வசனம்.

கேளுமையா சுவாமி நீங்கள் சொல்வதெல்லாம் சரிஅல்ல சுத்தமாக உங்களுக்கு சாஸ்திரங்களில் பழக்கமில்லைபோலிருக்கிறது

'இயல்பினுலில்வாழ்க்கை வாழ்பவனென்பான்
முயல்வாருள் எல்லாந்தலை'—என்று

சாஸ்திரங்களில் முறையிடுகின்றது அதாவது தருமவியல்போடு இல்லறத்தில் வாழ்பவன் உம்மைபோல் தபம்செய்கிறவர்கள் எல்லாருக்கும் தலையாவான் அது எப்படி என்றால் முற்றத்துறந்தவர்களாகிய தவசிகள் ஐம்புலன்களை விட்டமையால் அவர்களுக்கு முயல்வாரென்று பெயர். இல்வாழ்வான் அம்முயற்சிசெய்யாமலே பயனைப் பெருதலினுலே தபசிகளாயிருப்பதோடு என்னைப்போலொரு கன்னிகையை மணந்து இல்வாழ்க்கையை சரிவரநடத்தினுல் தபம்செய்து அநேகநாள்பொருத்து அடையும் பயனைவிட சீக்கிரத்தில் மோட்சத்தையடையலாம் அதுவுமல்லாமல் உம்மேல் இச்சைக்கொண்ட எங்களைசேர்ந்து சுகிக்காவிட்டால் அதனுல் உங்களுக்கு அதிக பாபம் உண்டாகும் அபயமென்றுவந்த எங்களை காத்து ரட்சிக்கவேண்டியது உங்கள் பாரமையா சுவாமி.

புலத்தியர் வசனம்.

ஓகோ நீங்கள் சும்மா போகமாட்டீர்போலிருக்கிறது சரி சரி இப்படியல்ல உங்களுக்கு தகுந்தவிதம்செய்யவேண்டும்.

புலத்தியர் தரு.

ஆ ஆ அப்படிசொல்ல வாச்சுதா-உங்கள்
ஆயுளின்றேடுமுடிந்து போச்சுதா
ஓகோ உங்களுயிரை ஒருநொடியில்வாங்குவேன்
பாகாகநான்தரும் சாபத்தைபிடியுங்கள் ஆ

புலத்தியர் வசனம்.

ஓகோபெண்களா இப்போதே உங்களுயிரை வாங்குவேன் பிடியுங்கள் சாபத்தை.

பொது வசனம்.

இந்தபிரகாரமாக புலத்தியர் சாபம் கொடுக்க ஆரம்பித்தஉடன் அரம்பாஸ்திரீகள் பயந்து ஓட்டம்பிடித்தனர்.

புலத்தியர் கவி.

எவ்விதரிஷிகள்தேவர் இவ்வுலகாளும்வேந்தர்
எவ்விதமகிமையுள்ள இராக்கதர்முதலாய்சீவ
எவ்விதசெந்துமேஎன் வனமதில்பிரவேசித்தால்
கவ்வியேகற்பமாகி கதறியேதவிக்கவேண்டும்.

புலத்தியர் வசனம்.

நாம் தவம்செய்யுமிடத்தில் அரம்பாஸ்திரீகள் தொந்தரவு ஏற்பட்டதால் இனி என்னுடைய தபச்சாரலில் இந்த கோட்டிற்குள்ளே ரிஷிகளாலும் தேவர்களாலும் மானிடராலும் மிருகசாதிகளாலும் பிரவேசித்தால் உடனே கற்பம் அடைந்து தவிக்கவேண்டியது என்று சாபம்தந்தேன்.

பொது வசனம்.

இந்தபிரகாரம் புலத்தியர் தபம்செய்யுமிடத்தில் அரம்பாஸ்திரிகளால் துன்பமேற்பட்டதால் அவருக்கு கோபமுண்டாகி அவர்தபச்சாலைக்கு ஒரு அத்துஉண்டாக்கி அந்த அத்துக்குள் யார்வந்தாலும் கற்பம் அடையவேண்டியது என்றுசபித்துவிட்டு பழயபடிதபத்தில் உட்கார்ந்துக்கொள்ள அரம்பாஸ்திரிகள் சாபத்திற்கு பயந்து ஓடி இந்திரனிடத்தில் நடந்தவிஷயங்கள் சொல்லி அவர்தபத்தை எங்களால் கலைக்கமுடியாது என்று சொல்லிவிட்டு அவர்கள் இருப்பிடம் போய்விட அதைக்கேட்ட தேவேந்திரமகாராஜன் விசனமுற்றிருக்கும்போது வனத்தில் பூசைசெய்யவேண்டி திரணபிந்துமகாரிஷியானவர் கொலுவைநாடி வருகிறவிதங்காண்க.

திரணபிந்துமகாமுனிவர் கவி.

சந்ததம்தேவபக்தி சதுர்மறைநீதியுற்று
பந்தமாவினைமறந்து பாவமேயறியாசெல்வன்
மந்தமாதனத்துள்மிக்க மாதவம்பெற்றதிரண
பிந்துமேசபையைநாடி பிரியமாய்வருகின்றேனே.

திரணபிந்து வருதல் தரு.

மெய்யில்வெண்ணீரணிந்து
கையிற்கமண்டலமேந்தி
துய்யனே பிந்துவந்தேன்—அரகரவென்று
சொல்லியன்பருக்கின்பம்தந்தேன்

பொய்கைதனையேநாடி பூசைதனையும்வேண்டி
பையரவமணிந்த பரமன்தனையேபாடி
(சுருள்) பாதளம் பூதளம் மீதிலும் செல்ல
காதகர்தங்களை வாதினால் வெல்ல மெய்

ஆசபாசமுமற்று நேசம்சிவன்மேலுற்று
பாசவலையுமற்று மர்சிலாமனமுற்று
(சுருள்) கேச முருக்குடன் வீசிகை நீட்டி
மோக பழித்துமே பாசமறுக்கபவ மெய்

கழுத்திலுத்திராட்சம் காதில்குண்டலமின்ன
உருத்தெரியாமலே ஒளியுமிகுத்திட
(சுருள்) கால காலன்பதம் ஏலவே பாடியும்
சீலமுள்ளதவ சிரேட்டரை நாடியும் மெய்

பர்வதராஜனளித்த பார்வதிதனக்குநாதன்
சர்வசம்மாரமூர்த்தி தாளினை தன்னையேற்றி
(சுருள்) பாதமதைதினம் ஓதும் தயர்ந்திட
சாதகமாய் சிவ போதனை தான்பதி மெய்

அரகாசிவவென்று அரனையேதுதிசெய்து
வரமதைபெறவேண்டி வாகாய்நடைநடந்து
(சுருள்) பாசமுடன் சிவ நேசர்கள் சூழவே
ஆசை வனமதில் பூசைகள் செய்யவே மெய்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அடா சீடர்களே நாமென்ன பூசைசெய்யவேண்டி தடாகமுண்டான இந்தவனத்தில் வந்தபடியால் என்பூசைக்குவேண்டிய நல்ல மலர்களை கொண்டுவரவேண்டியது ஆகையால் என் அருமைக் குமாரத்தியாகிய லபிலையம்மனை சீக்கிரம் வரச்செய்வீர் சீடர்களே.

சீடர்கள் வசனம்.

அப்படியே வரச்செய்கிறோம் சுவாமி.

சீடர்கள் வசனம்.

நாம்சீக்கிரத்தில் நம்குருநாதருடைய வீட்டிற்குபோய் லபிலை யம்மனை வரச்செய்யவேண்டும்.

பொது வசனம்.

இந்தபிரகாரம் திரணபிந்துமகாரிஷியார் உத்தரவுபடி சீடர் கள்வீட்டிற்குவந்து லபிலையம்மளிடம் சொல்ல லபிலையம்மன் தகப் பனிடம் வருகிறவிதங்காண்க.

லபிலையம்மன் கவி.

விந்தையாம்தவத்தில்மிக்க விமலனுயாகும்திரண
பிந்துவேஎன்னையிங்கு பிரியமாயழைத்தசேதி
சிந்துமேவாடாமுன்னம் நானுமேகண்டுஎந்தன்
தந்தையைபணிந்துதிவ்ய தாளினைவணங்குவேனே.

லபிலையம்மன் வருதல் தரு.

சித்திரபதுமைபோலே
மெத்தவும் பணிகள்பூண்டு
சேல்விழியிரண்டுர்துன்னவே—லபிலைமாது
சீக்கிறம்வந்து மேவினுள்
(சுருள்) சிந்தையில் சிவனையே நொந்துமே கொண்டவள்
தந்தையர்தாளினை வந்துபணிந்திட சித்

காதில் கம்மல் ஜிமிக்கை காலில்தண்டைகொலுசு
மேலும்தகதகென்னவே—லபிலைமாது
மேவிசபைநாடி வாரேனே
(சுருள்) சுந்தரவதியென வந்தவர் பொழிந்திட
கந்தமுடன்பனிங்கு சந்தனம்வீசிட சித்

கர்த்தனுன சிவனை நித்தம் துதியேசெய்து
சித்தமதில் பத்திகொண்டுமே—லபிலைமாது
சுத்தமுடன்வந்துதோன்றினுள்
(சுருள்) அரகர சிவசிவ திரிபுரதகனனே
வரமதைதந்தருள் பருவதன்மருகனே சித்

பேருலகிலிவருக்கு யாரும்நிகரில்லாத
சீருடைய கன்னியென்னவே-லபிலைமாது
தீரமுடன்வந்து தோன்றினாள்
(சுருள்) பாசமுடன் திரு வருள்தனைநாடியே
நேசமுடன்பெரு யின்பத்தை நாடியே சித்

சுந்தரமுடன் தகப்பன் வந்திடவேண்டுமென்று
தந்திட்டமொழியை கேழ்க்கவே-லபிலைமாது
விந்தையாக வந்துதோன்றினாள்
(சுருள்) பாரிலரநெறி கோரியே வனமதில்
சீறியகுணமுள செல்விநானென்னவே சித்

அருகினில்தோழிவர ஆசிமறையோர்கூற
குருகியபிடையும் தன்னவே-லபிலைமாது
வருகிறேன்சபையை நாடியே
(சுருள்) வந்தனம் தந்துமே பிந்துவைக்கண்டிட
தந்தனதாவென தாளமும் மண்டிட சித்

லபிலை வசனம்.

நாமென்ன தகப்பனார் வார்த்தைப்படி சபையைநாடிவந்தபடியால் இனிதந்தையைகண்டு அவர்பாதத்தில் பணிவோம்.

லபிலை தரு.

வந்தனம் தந்தேனையா என்தந்தையே வந்தனம்தந்தேனையா
வந்தனம்தந்தேன்யான் சிந்தைமகிழுமே வந்

திரணபிந்து தரு

வாழ்குவாய்கண்மணியே நீடூழிநீ
வாழ்குவாய் கண்மணியே
வாழ்குவாய் நீயுமே வையகம்தன்னிலே
வாழ்குவாய் கண்மணியே

லபிலை வசனம்.

அகோகேளும் தந்தையே உன்பாதாரவிந்தகமலங்களுக்கு அடியாள் லபிலை அநேகவந்தனம்.

திரணபிந்து வசனம்.

கேளுமம்மா லபிலையே என்பாதத்தில் பணிந்தபடியால் நீடூழிக் காலமாக சுகமாக வாழ்ந்திருப்பாய் எழுந்திரு.

லபிலை கவி.

எத்திசைதனிலுமிக்க யின்பமேகொண்டுதேவர்
பத்தியேசெய்யுகின்ற பரமனார் அடியார்தம்மில்
மெத்தவேபுகழும்பெற்ற மெய்யனேஎன்னையீன்ற
அத்தனேஅழைத்தசேதி அன்புடன்சொல்லுவீரே.

லபிலை வசனம்.

அகோகேளும் தந்தை இதுகாலமில்லாமல் என்னை தாங்கள் வரும்படியாய் தெரிவித்தபடியால் அந்தவிஷயத்தைபற்றி சொல்ல வேண்டுமையா சுவாமி.

திரணபிந்து வசனம்.

கேளும் குமாரத்தியே உன்னைவரும்படியாகச்சொன்னவிஷயம் ஏதென்று கேட்டபடியால் அதன் விபரத்தை சொல்லுகிறேன் கேளுமம்மா லபிலையே.

திரணபிந்து கவி.

எந்தநல்லருமைச்செல்வி ஏந்திழைகேளுமம்மா
பந்தமாவினையகற்றும் பரமனார்பூசைசெய்ய
கந்தமுமிருந்தநல்ல கனிவுளமலர்கள்வேண்டி
உந்தனையழைத்தசேதி உரைசெய்வேன்கேளுமம்மா.

திரணபிந்து தரு.

ஆலகாலமுண்ட நீலகண்டற்தனது
சீலமுள்ள பூசைசெய்யவே—மலர்கள்வேண்டி
கோலமுடன் உனையழைத்தேனே

லபிலை தரு.

எந்தனதரும்தந்தை உந்தனுடையபூசை
சிந்தனையில்லாது செய்யவே-அருமைசொலி
சந்தோஷமாகசெல்வனே

திரணபிந்து தரு.

நேசம்சிவன்மேல்கொண்டு பூசைமிகவேசெய்ய
ஆசையும்கொண்டேன் நானுமே—அரகரவென்று
பூசையும்செய்யவிண்டேனே

25080

லபிலை தரு.

சிந்தனைமனதினில்கொண்டு நைந்துமேவக்கம்கொண்டு
சொந்தமகள்நானிருக்கவே—தந்தையரே
நொந்துமிகவாட வேண்டாமே

திரணபிந்து தரு.

நொந்துமிகவாடவில்லை கந்தமலர்குழலி
சந்தோஷமாகநீயுமே—மலர்கொண்டு
வந்துமே பூர்த்திசெய்யுமே

லபிலை தரு.

பட்சமேகொண்டுநான் லச்சையில்லாமலே
இட்சணம் மலர்கள்கொண்டுமே-நானும்ஓடி
தட்சணம்வந்துசேருவேன்

திரணபிந்து தரு.

போய்வருவாய்மகளேநீ பூசையும்செய்யவே
ஆசையாய்மலர்கள்கொண்டுமே-வருவாயே
நேசம்சிவன்மேல் விண்டுமே

லபிலை தரு.

சொந்தமுடனந்த நந்தவனமதிலே
சேர்ந்துமலர்கள் கொய்துவருவேன்—தந்தையரே
சோர்ந்துவாடா முன்னம்தருவேன்

லபிலை வசனம்.

கேளும் என்தந்தையே உம்மிஷ்டபடியே சிவபூசைசெய்ய நல்ல மலர்களை கொண்டுவருகிறேன் நீங்கள் தயவுசெய்து விடைதாருமையாசுவாமி தந்தையே.

திரணபிந்து வசனம்.

கேளுமம்மா என் அருமைக் குமாரத்தியே நீ சந்தோஷமாக சீக்கிரத்தில் நந்தவனம்போய் பூசைக்குறிய நல்லமலர்களை கொண்டு வருவாயம்மா லபிலையே.

லபிலை வசனம்.

மகாபாக்கியம் அப்படியே உம்மிஷ்டபடி போய்வருகிறேன் அப்பா தந்தையே.

பொது வசனம்.

இந்தபிரகாரம் லபிலை நந்தவனம் போக தகப்பனாரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்படும் சமயத்தில் லபிலையம்மன் தகப்பனாரிடம் தெரிந்து தோழியான சற்குணலபிலையை தேடிவருகிற விதங் காண்க.

சற்குணதோழி வருதல் கவி.

சுந்தரமுகம்துலங்க
அந்தமுள்ளதோழியவள்
வந்தேன்சபையைநாடியே—லபிலைதன்னை
முந்தவேகாணஓடியே

கந்தகளபம்பூசி — சிந்தைமிகவேகூசி
சந்தோஷமாகபேசி — சபைதனிக்கையைவீசி
(சுருள்) பத்தரும் சித்தரும் — பார்த்துமயங்கிட
தத்தன தாவென — தாளமுழங்கிட
பத்தரைமாத்துள்ள — பசும்பொன்னைபோலவே
சுத்தஉடைதரித்து — சுருங்கிமிகவேகோணி
(சுருள்) கண்டவர் மையலும் — கொண்டு மயங்கிட
தெண்டமுடன் சபை — கண்டு வணங்கிட — சுந்
அந்தரமாதர்களும் — விந்தையெனவேநாண
சுந்தரநடையுடனே — சொகுசாளவருங்காண
(சுருள்) மாது லபிலையின் — தோதுயிவளென
ஓதவேயாவரும் — சாதகமாகவே — சுந்
நந்தவனத்திலந்த — சுகந்தலபிலையுடன்
விந்தையுளமலர்கள் — பந்தமுடனேகொய்ய
(சுருள்) இப்புவி தன்னிலே — தப்பித மன்றியே
ஒப்பியே நடந்திட — தற்பரனடி தொழ — சுந்

சற்குணை வசனம்.

அடே காவலா நான்வந்திருப்பதாக என்தாயாகிய லபிலையம்மனுக்கு தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேனம்மா தோழியே.

சேவகன் வசனம்.

அம்மா உமது தோழியாகிய சற்குணையம்மன் வந்திருக்கிறது.

லபிலேயம்மன் வசனம்.

அப்படியானுல் அருகாமையில்வரச்செய்வாய்

சேவகன் வசனம்.

அம்மாதோழி உன்னை அருகாமையில் வரச்சொன்னுர்கள்.

சற்குணை வசனம்.

அப்படியானுல்சரி போய்வருகிறேன்.

லபிலே வசனம்.

அடி தோழி எவ்விதமாக இவ்விடம்வந்தாய் நான் இங்குபோயிருப்பது எப்படி உனக்கு தெரியும்.

சற்குணை வசனம்.

அம்மா தங்கள் சிறிதுவேலையிட்டார்கள் அதைசெய்துவிட்டு வந்தேன் தாங்கள் எங்கேஎன்று கேட்டதற்கு தன் தகப்பனுரிடம் போயிருப்பதாய் சொன்னுர்கள் நான் உடனே புறப்பட்டு இங்கு வந்தேன்.

லபிலே வசனம்.

அடி தோழி நாம் இருவரும் தந்தையின் பூசைக்கு மலர்வேண்டி நந்தவனம்போகவேண்டும் வருகிருயா.

சற்குணை வசனம்.

அப்படி உன்னிஷ்டபடி போவோம் தாயே.

பொது வசனம்.

இவ்விதமாக தோழியும் லபிலேயம்மனும் பூசைக்கு மலர்கள் கொண்டுவர நந்தவனம்வருகிருர்கள்.

லபிலே தரு.

நந்தவனம்தன்னைநாடி கந்தமலர்தன்னைதேடி
ஓடியே—மனம்-வாடியே
பாரிஜாதமுடன்நல்ல பகருமல்லிகைமுல்லை
தேடியே—நானும்-கூடியே
படர்ந்தசெந்தாமரையும் அடர்ந்தபுன்னைகோகிலம்
தன்னையே-அதை-முன்னையே
கொன்றைதும்பையுடன் குறிவேர்தவனமும்
கொள்ளவே—அதை—கிள்ளவே
நந்தியாவட்டமுடன் நறுமணரோஜாவும்

நண்ணியே-மனதில்-எண்ணியே
சுந்தரனடிவணங்கி வந்தேன்வனமதிலே
துய்யனே-எந்தன்-மெய்யனே

லபிலே வசனம்.

கேளுமம்மா தோழி நாம் தந்தையின்பூசைக்காக மலர்கள்வேண்டி இந்த நந்தவனத்தில் வந்தபடியால் பூசைக்குதகுந்த நல்லவாசனைத்தரக்கூடிய மலர்களைப்பறித்துக்கொண்டு போவோம் வருவாயடி தோழி.

சற்குணை வசனம்.

அப்படியே நல்லவாசனைத்தரக்கூடிய மலர்களை பறித்துக்கொண்டுபோவோம் வருவாயம்மா தாயே.

லபிலே மலர்க்கொய்தல் தரு.

என்னருமைகுணமுள்ள சேடி-நீ
என்னுடன் துணையாகவாடி
முன்னம்எந்தன் தந்தைசொன்ன
வன்னமொழி தள்ளிடாமல்
போவோம்-வனம்-சேர்வோம்

சற்குணை தரு.

கன்னல்மொழியாரணங்கே நாமே-தந்தை
சொன்னமொழி தள்ளிவிடபோமோ
பின்னமது யில்லாமலே
முன்னமே நடந்துநாமும்
கூடி-வனம்-நாடி

லபிலே தரு.

சுந்தரவனமதிலே நாமே-கூடி
சந்தோஷமலர்பரிப்போம் தாமே
விந்தையுள்ள சுந்தரமே
தந்தையின் நல்லிஷ்டபடி
போவோம்-வனம்-சேர்வோம்

சற்குணை தரு.

என்னிடவாசியே நீகேளாய்-வனம்
தன்னிடம்வந்தோமேநாம் மேலாய்

பொன்னருங் குணமுள்ள
என்னருமை தாயேநீயும்
வாராய்-வனம்-நேராய்

லபிலை தரு

வந்தோமே நாமிருவர்கூடி-நாம்
நந்தவனம்தன்னையுமே நாடி
அந்தமுள்ளசாலைவழி
விந்தையுடன் நீயுமங்கு
போடி—என்-சேடி

சற்குனை தரு.

சேலைபழித்த விழிமானே-நானும்
சாலைவழியாகப் போவேனே
சோலைக்குயில்போல் நீயும்
சாலவே மலர்கள்கொய்து
வாராய்- இன்பம்-தாராய்

லபிலை தரு.

விந்தையுள விதவிதமலர்கள்-அதை
சொந்தமுடன் ஆசைக்கொள்ளபலர்கள்
பந்தமற சிவன்தன்னை
கந்தமலர் தன்னைக்கொண்டு
இணங்க-அடி-வணங்க

சற்குனை தரு.

முந்தியேசிவபூசைசெய்ய—நாமும்
பந்தியாய்நமதுசென்மம் உய்ய
நந்தியா வட்டமுடன்
நருமலர்கொன்றையும்
பாராய்-இதை-நேராய்

லபிலை தரு.

அந்தமுள்ளமல்லிகையு முல்லை—அது
கந்தமிதைவிட வேறில்லை
மந்தாரை கோங்குபுன்னை
செந்தாமரை யிதுவே
பாராய்-இதை-சீராய்

சற்குணை தரு.

அம்மம்மாயிதுவென்ன மலரோ—இந்த
அரிவையர்க்குறைப்பவர் சிலரோ
சும்மாளதற்குமலர்
அம்மாபோது மிதுவே
நாமே-இல்லம்சேர்-வோமே

சற்குணை வசனம்.

கேளுமம்மாதாயே நாம் வேண்டிய மலர்கள்கொய்துவிட்டோம் இனிமேல் மலர்வேண்டியதில்லை நாம் தந்தையிடம் போவோம் வருவாயம்மாதாயே.

லபிலை வசனம்.

அப்படியே மலர்கள் போதுமானது தந்தையிடம் போவோம் வருவாயடி தோழி.

பொது வசனம்.

இவ்விதமாக லபிலையம்மனும் தோழியும் மலர்கள் கொய்துக் கொண்டு தந்தையிடம் வரும்போது புலத்தியருடைய சாபம்பெற்ற விடத்தில்வந்து முன்னுடிவந்த லபிலையம்மன் கர்பம் அடைந்துதவிக்கிற விதங்காண்க.

லபிலை பத்தியம்.

அய்யய்யோ இதுவென்ன அனியாயம் அனியாயம்
ஆரிடம் சொல்லுவேன் அருமைசேடி
மெய்யற்கு மெய்யனும் சிவனையே பூசிக்க
மேன்மையுரு என்தந்தை மொழிபடிக்கு
பொய்யொன்று மில்லாமல் பூசைநிறைவேறவே
புஷ்பங்கள் கொய்யவே வனத்தில்வந்தேன்
பைய்யரவணிந்தவா பரமனே என்வயிறு
பாரமாய்தோணுதே என்னசெய்வேன்
(சுருள்) தந்தையின் வார்த்தைபடி வனத்தில்வந்தேன்
தப்பிதமாய் முடிந்ததினுல் மனமும்நொந்தேன்
இப்புவியில் கார்ப்பவ ரில்லாமல்நின்றேன்
ஈசனே எனைக்கார்த்து ரட்சிப்பாயே

லபிலை வசனம்.

அய்யோ சிவமே என்னயிது அய்யோ அய்யோ சுவாமி.

லபிலை தரு.

என்னசெய்வேன் ஏதுசெய்வேன்
இந்தவிதி வந்ததையோ
சின்னஞ்சிறுவயதில்நான்
சீர்குலைய காலமாச்சே
முன்னாளில் செய்தவினையது
மூண்டதோ நானறியேன்
தந்தையவர் சொற்படிக்கு
தாதியருடனே கூடி-நான்
வந்தேன் மலர்கள்கொய்ய
வகைமோசம் வந்ததையோ
பார்ப்பார் நகைப்பார்களே
பரியாசம் செய்வார்களே
தேரையரும் செவ்விளநீர்
உண்ணுபழிச்சுமப்பர்
நாரியரும் அதைப்போலவே
நானுமே பழிச்சுமந்தேன்
ஆலமுண்ட சொக்கநாதா
அடியாளைக் கார்க்கொணுதா
நாளுமிந்த பழிசுமக்க
நானுமே பெண்பிறந்தேன் என்

லபிலை வசனம்.

ஒகோ ஜெகதீசனே என்ன விதிவைத்தாய் சிவமே அய்யோ சுவாமி.

லபிலை தேவாரம்.

மெய்யற்குமெய்யனே பையரவணிந்தவா மேதினியை கார்க்குந்திரா
துய்யனேஉனதுதிரு வடிதனைநம்பினேன் துயரமதை தீருமையா
பொய்யதையறியாத பேதையைகார்த்தருள் புலியுடையணிந்தநாதா
அய்யனேஉமதயிரு பாதாரவிந்தமதில் அடியாள்பணிகுவேனே.

லபிலை வசனம்.

அடி சேடி என்னகாரணம் தெரியவில்லையே ஒன்றுமில்லாமலே இந்தபழியானது சேர்ந்தது நான்முன்னேயும் நீ பின்னேயும்வந்தோ

மே முன்வந்த எனக்குமாத்திரம் இப்பேர்பட்ட கோலமானது உண்டானகாரணம் தெரியவில்லையே இதற்கு என்னசெய்வேன் சொல்லடி சேடி.

சற்குணை கவி கந்தார்த்தம்.

என்னென்று அறியேனம்மா என்னிடவரசிகேளாய்
முன்னவன் பாதம்தன்னை முந்தவேபணியஎண்ணி
சொன்னமாமயிலேயிந்த சுகமதை காணவேதான்
கன்னிநாம் வந்தோமென்று

சற்குணை தரு.

திகைத்துநான்வாடுகின்றேனே—அம்மாஉன்
சுகத்தையின்றோடு கொன்றேனே
பகைத்துமேயீசன்நம்மை நகைத்துமேவிட்டாரம்மா
சுகதுக்கமிரண்டுமே சொந்தமென்றறிவாயே தி

சற்குணை வசனம்.

கேளுமம்மாதாயே திடலென்று இவ்விதமானதினால் நான் திகைத்து தடுமாறிவிட்டேன் எனக்கு ஒன்றும்நிலைப்படவில்லை இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது இதற்கு என்னசெய்யலாம் கடவுள் நம்மை இம்மாதிரியான கோலம்செய்துவிட்டார் என்னசெய்யலாம் அம்மா.

லபிலை தரு.

காலமெல்லாமிழிவு ஆச்சே-என்
சீலமெல்லாங் கெட்டுபோச்சே
ஞாலமதிலென்னைப்போல் கோலமுண்டபெண்களில்லை
மேலைத்தவத்தின்படி இன்றைக்கும் ஆச்சுதடி

லபிலை வசனம்.

கேளுமடி தோழி காலமெல்லாம் என்னை இழிவாகப்பேசும்படி கடவுள் செய்துவிட்டார் முன்னாளில்செய்த வினைவசமோ தெரியவில்லையே இதற்கென்னசெய்யலாம் தோழி.

சற்குணே தரு.

அம்மாமெத்தவும் துடிக்காதே-அந்த
பெம்மான்சிவனருள் தப்பாதே
சும்மாயிருந்தஉன்னை சோதிக்கிராரேயீசன்
நம்மாலாவதொன்றில்லை நம்பனருளிதுவோ

சற்குணே வசனம்.

கேளுமம்மாதாயே நீ சும்மா அழுதுதுடிப்பதால் ஆவதொன்றில்லை ஈசன்செயல் எப்படியோ உன்னை யீசன் சோதிக்கிராரோ தெரியவில்லை இருந்தாலும் காப்பாற்றுவார் நீ அழவேண்டாம் அம்மாதாயே.

லபிலே தரு.

தந்தைதாய்தன்னையுமே கண்டு-இந்த
விந்தையை எப்படிமனம்விண்டு
சந்தேகம்என்மேல்கொண்டு சபிப்பாரேஎன்தந்தை
சொந்ததாயும்வீட்டில் சேர்ப்பாளோ சொல்லுமடி

லபிலே வசனம்.

கேளுமம்மா தோழியே நான் எந்தவிதமாக என்தாயார்தகப்பன்முகத்தில் விழிப்பேன் அவர்கள் என்னை வீட்டில் சேர்ப்பார்களோ சொல்லுமடி தோழி.

சற்குணே தரு.

சொல்லுவேன்கேளம்மா தாயே-நான்
விள்ளுமொழிதன்னையும் நீயே
அல்லலகற்றுமீசன் ஆதரிப்பாரே நம்மை
தெள்ளுமொழியாளே தியங்கிவாடவேண்டாம்

சற்குணே வசனம்.

கேளுமம்மாதாயே நீ ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம் எல்லாரைகார்க்கும் பரமன் நம்மையும் காப்பாற்றுவார் நாம் வீட்டுக்கு போவோம் வாருமம்மாதாயே.

லபிலை தரு.

எப்படிசேர்வேனில்லம் மானே—உன்
சொற்படிகேட்டுமே மானே
சொந்தமுடன் தகப்பன் பந்தமாய் பூசைசெய்யும்
அந்தவிடமதற்கு எந்தவிதம்நான் வருவேன்

லபிலை வசனம்.

கேளம்மா என்னருமை தோழியே நாம்தந்தை பூசைசெய்ய வேண்டி அவர் இஷ்டபடி மலர்கள்கொண்டுவர வனத்திற்கு வந்தோம் மலர்கள் கொய்துக்கொண்டு திரும்பிவரும்போது பார்ப்பார் நகைக்கும்படியான இந்த கோலமானது உண்டாகிவிட்டது ஆகையால் நான்எப்படி மனம்துணிந்து வீட்டுக்குவருவேன் சொல்லுமம்மா தோழியே.

சற்குணை வசனம்.

கேளுமம்மாதாயே நீ மெத்தவும் விசனப்படவேண்டாம் எது வந்தாலும் வரட்டும் எல்லாம் ஈசன்செயல்.

'ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தாமுந் துறும்-என்று'

பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடி ஊழைவிட வலிமையுடையவை எவையிருக்கின்றன அவ்வூழை விலக்கும்பொருட்டு ஒன்றை நினைக்கினும் நாம் நினைப்பதை விலக்கி அவ்வூழே முன்வந்து நிற்கும் ஆகையால் நம்மாலாவது ஒன்றுமில்லை நீ ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம் என்னுடன் வருவாயம்மாதாயே.

பொதுவசனம்.

இவ்விதமாக நந்தவனத்தில் தோழியும் லபிலையம்மனும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது லபிலையின் தாயான அலம்பசையம்மன் தன்குமாரத்தி வனம்போனவள் இன்னம் வரவில்லை என்று சபையைநாடி வருகிறவிதங்காண்க.

அலம்பசை கவி.

விந்தையாம்பணிகள்யாவும் விதவிதம்பூண்டுதிவ்ய
கந்தமுமணிந்துசேலை காந்தியும்மிகசொலிக்க
முந்தவேமாலைதன்னில் மொய்க்கும்வண்டினங்கள்பேசும்
சந்தமேஒலிக்கநானும் சபைதனில்வருகின்றேனே.

அலம்பசை வருதல் தரு.

சுந்தரமுகந்துலங்க கந்தமலர்மேலிலங்க
அலம்பசைமாதுவந்தேன் வெகு ஒய்யாரமாய்
கண்டவாதிசயிக்க தண்டைகொலுசொலிக்க
அண்டபுவனமெல்லாம் அதிசயமிகவேகொள்ள
(சுருள்) ஆசிமறையவர் பேசிபடித்திட
வீசியேகைகளே கூசிநடந்துமே சுந்

மரணஜெனனமெல்லாம் மாற்றியேசுகித்திடும்
திரணபிந்துக்குநல்ல தேவியாய்வந்திடும்
(சுருள்) அரகரசிவசிவ குருபரவறுமுக
ஐங்கரர்தாதையை பொங்கமாய்வணங்கியே சுந்

பாதகமிலாவபிலே தாதையின்பூசைக்காக
பேதகமில்லாமலே சாதகமலர்கொய்ய
(சுருள்) போனவளின்னம் காணேன்என்னமோ
வேணவேகாலங்கள் வீணுகபோனதே சுந்

பெருமையுடனேமகள் அருமைதோழியுடனே
தருணமேபோனாளே சிருமைஎன்னவாச்சோ
ஒருநொடிநேரமும் எனைவிட்டுபிரியாள்
வரும்வழிதன்னிலே வாட்டமாய்பார்த்திட சுந்

அலம்பசை கவி.

தந்தையின்பூசைக்காக தாழ்குழல்சோதியாளும்
முந்தவேமலர்கள்கொய்ய மொய்குழல்சேடியோடு
எந்தனின்மகளுங்கூடி யின்புடன்போனாளின்னம்
வந்துமேசேரவில்லை வகையதுயறிகிலேனே.

அலம்பசை வசனம்.

ஆ! ஆ! என்னகாரணமோ தெரியவில்லையே தந்தையின்பூசைக்காக மலர்கள்கொண்டுவர தோழியுடன்போன லபிலையானவள் இதுவரையில் வராதகாரணம் ஒன்றும்தெரியவில்லையே என்னசெய்வேன்

அலம்பசை பொதுவசனம்.

இவ்விதம் அலம்பசையம்மன் தான் வரவில்லை என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கும்சமயத்தில் லபிலையம்மன் தோழியுடன் மிகவும் துயரத்துடன் வருகிறவிதங்காண்க.

லபிலை தரு தாயிடம் வருதல்.

அரனே கங்காதரனே உந்தன்
அருளோயிது சிவமே
சின்னஞ்சிறுவயதிலிந்த
சிறுமைப்பட விதியோ
ஒன்றுமே நானறியே னென்னை
கன்றிவாட வைத்தீர்
எந்தன்தாயா ரென்னைக் கண்டால்
எப்படிதான் ஒப்புவாளோ
தப்பிலிதனமதாக நான்
தாழ்வும் மெய்யவில்லை
ஒப்பியெனக்கு இந்தவிதி
யுதிக்கசெய்தாய் பரனே

லபிலை வசனம்.

அய்யோ சிவமே நான் குற்றமும் செய்யாமலே எனக்கு இந்த விதியானதுவந்ததே என்னசெய்வேன் ஜெகதீசனே.

பொது வசனம்.

இவ்விதமாக லபிலையம்மன் அழுதுக்கொண்டு வீட்டுக்குவா மகள் வரவில்லை என்று எதிர்ப்பார்த்திருந்த அலம்பசையானவள் தன்மகளின் குரலோசையைக்கேட்டு மகளே ஏதென்று விசாரிக்கிற விதங்காண்க.

அலம்பசை வசனம்.

அம்மா லபிலையே என்ன அழுதுக்கொண்டுவந்தாயே என்ன காரணம் ஒன்றும் தெரியவில்லையே என்னநடந்தது சொல்லுமம்மா லபிலையே.

லபிலை வசனம்.

அம்மா நான் தகப்பனார் சொற்படி நந்தவனம் சென்று மலர்கள் கொய்துக்கொண்டு வரும்போது திடீரென்று வரும்வழியில் என்னென்று சொல்வேனம்மாதாயே.

அலம்பசை வசனம்.

அம்மா லபிலையே நீ மலர்கள் பரித்துக்கொண்டுவந்தாய் வழியில் என்னநடந்தது சொல்லம்மா லபிலையே.

லபிலே வசனம்.

நான் என்னென்றுசொல்வேன் என்மனமானது பதைக்கிறதே

அலம்பசை வசனம்.

அம்மா லபிலேயே நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் நடந்தவிஷயத்தை சொல்வாயம்மா.

லபிலே வசனம்.

கேளுமம்மா தாயே நான்தந்தையின்வார்த்தைப்படி நந்தவனம் சென்று மலர்கள் கொய்துக்கொண்டு திரும்பிவரும்போது திடீரென்று என்வயிரானது பெருத்து கர்பமானது உண்டாகிவிட்டது என்னசெய்வேனம்மாதாயே.

அலம்பசை வசனம்.

அடி அடீ சண்டாளி என்னவார்த்தைச் சொன்னாய் சரி சரி நீ சும்மாவந்துக்கொண்டிருந்தாய் தானே கர்ப்பமாகி விட்டதென்று சொல்லுகிறாய் பேஷ்வெகு நன்றாய் இருக்கிறது சரி சரி.

அலம்பசை கவி.

நலத்தையேமிகவும்வேண்டா நாய்தனக்கீடாயான
குலத்துக்குயீனம்செய்த கோடாரிகாம்பேநீதான்
தலத்திடைசேரவேண்டாம் தள்ளுவேனுன்னையிப்போ
புலத்தியாய்போனநீதான் போகுவாயிவ்விடம்விட்டே.

அலம்பசை தரு.

சீ சீ இவ்விடம்விட்டு போடி-வெகு
போக்கிரித்தனமுள்ள மூடி
போக்குகள்சொன்னாலே நீக்காதிரேனுன்னை
யோக்கியமில்லாத வாக்கியம்சொல்லவந்தாய் சீசீ

போங்காலமாஉனக்கு புத்தியில்லையாநாயே
ஆங்காரம்கொண்டதால் அடிப்பேன்துடப்பத்தாலே சீசீ

நலத்தையெல்லாம்விட்டு குலத்தையும்கெட்டு
பலத்தபழியைதொட்டு தவத்தையும்கெடுத்தாய் சீசீ

சூதுஒன்றுமறியா பேதையைபோலநீ
ஓதவந்தாய்மந்திரம் போதும்போதும்தந்திரம் சீசீ

எந்தநேரத்தில்போய் வந்தாய்நீயிந்தவேளை
சந்தேகம்பிள்ளைநீயும் விந்தையேசொல்லவந்தாய் சீசீ
ஆர்மதிப்பாருன்சொல்லை அறைவதுலகிலில்லை
ஊர்தானறிந்தாலே பேர்தான்கெடும்மேலே சீசீ
புத்தியில்நீமெத்த சத்தியவதியென்று
சித்தமதில்கொண்டு மெத்தவும்மதித்தேனே சீசீ
மட்டித்தனமுள்ள குட்டிச்சுவரோ நீ
எட்டிஉதைப்பேனே என்வீட்டில்நிற்காதே சீசீ

அலம்பசை வசனம்.

அடி சண்டாளி என்னெதிரில் நிற்காதே இப்போதே இதை விட்டு ஓடிப்போவாய் நாயே.

லபிலை வசனம்.

அம்மா நான் ஒன்றுமறியேன் தந்தையின்பூசைக்காக மலர்கள் கொய்து வரும்வழியில் திடீரென்று இவ்விதம் நடந்துவிட்டது மற்றபடி நான் ஒன்றுமறியேனம்மா தாயே.

அலம்பசை வசனம்.

ஆ ஆ வெகு சமர்த்தடி உன்சாமார்த்தியமெலலாம் என்னிடம் காட்டவேண்டாம் நீ சொல்லுவதைநான் உண்மை என்று நம்புவேனென்று நினைக்கிறாயா போடிபோ சூதுக்கள்ளி.

லபிலை தரு.

சூதுஒன்றும் நானறியேன்
சொல்லுவேன் கேளம்மா
ஏதோயிது அறிகிலேனே
இடராய் வந்ததம்மா

லபிலை வசனம்.

அம்மா நான் ஒருசூதும் அறியேன் இந்த இடரானதுதானே வந்ததம்மா.

அலம்பசை தரு.

இடராதுவந்ததென்று என்னிடம்சொல்லவேண்டாம்
எல்லாமறிவேனுன்போடி-என்னை
ஏமாற்றஉன்னாலாமோடி.
என்னென்றுநினைத்தாயோ ஏற்காதுஉன்வார்த்தை
எட்டிநடவடிமூடி.

அலம்பசை வசனம்.

அடி சண்டாளி என்னை ஏமாற்ற நினைக்கிறாய் அது முடியாது நீ என்னசொன்னாலும் உன்வார்த்தை எனக்கு ஏற்காது இவ்விடம் விட்டு சீக்கிரம் போய்விடுவாய்.

லபிலே தரு.

ஏமாற்றம்நான் சொல்லவில்லை
யீசன்செயலிதுவே-ஐயோ
நீமாற்றமேகொள்ளவேண்டாம்
நினைப்பாய் உண்மைதாயே

லபிலே வசனம்.

அம்மா நான் உன்னை ஏமாற்றவில்லை யீசன்செயலிப்படியிருக்கிறது நான்சொல்வதைநம்பி என்னையாதரியுமம்மாதாயே.

அலம்பசை தரு.

தாயென்றுஎன்னைநீ நேயமாயழையாதே
ஏதுவுனக்குதாயோடி-உன்
சூதெல்லாமறிவேன்போடி
கோடிதவம்செய்து தேடிஉனைப்பெற்றேரும்
எல்லாம்கெடுத்தாயே நீயே

அலம்பசை வசனம்.

அடிசண்டாளி நீ என்னைதாயென்று அழைக்கவேண்டாம் உன்னை எவ்வளவோ தவம்செய்து பெற்றெடுத்தோம் அதையெல்லாம் கெடுத்துவிட்ட நீ என்னெதிரில் நிற்காதே ஓடிப்போவாயடி நாயே.

லபிலே தரு.

அம்மா என்னை யேசவேண்டாம்
பெம்மானருளிதுவோ
சும்மாவந்தஎன் தலையில்-இந்த
சுமையும்வந்ததம்மா

லபிலே வசனம்.

அம்மா என்னை யேசவேண்டாம் நான்மலர்கள் கொய்துக்கொண்டுவரும்போது இந்த சுமையானது எனக்கு ஏற்பட்டது பெம்மான் சிவனறிய சொல்லுவேன் என்வார்த்தையை நம்பி என்னை ஆதரிக்கவேண்டுமம்மாதாயே.

அலம்பசை தரு.

பெம்மானருளென்று பேசாதேயென்னிடம்
சும்மாவென்னிடம் சொல்லாதே-நீ
இம்மனைதன்னில்நில்லாதே
அம்மா அம்மாவென்று அழைக்காதே எந்தனை
அடிப்பேனுன் தாடையில்போடி

அலம்பசை வசனம்.

அடி கெட்டகுணமுள்ள நாயே பெம்மானருளென்றும் அம்மா அம்மாவென்றும் என்னிடம் சொல்லவேண்டாம் என்வீட்டிலும் நிற்கவேண்டாம் இவ்விடம் சற்றுநேரம் இருந்தால் உன்கன்னத்தில் அடிப்பேன் உடனே இதைவிட்டு ஓடிப்போவாயடி நாயே.

லபிலை தரு.

நில்லாதே என்றென்னை
சொல்லாதேயம்மாநான்
விள்ளுமொழிதன்னைகேட்டு
வீட்டைவிட்டு ஓட்டும்

லபிலை வசனம்.

அம்மா என்னை வீட்டில் நிற்கவேண்டாம் என்றுசொல்லவேண்டாம் நான் சொல்லும் வார்த்தையை கேட்டு பிறகு எதுவேண்டுமானாலும் செய்யுமம்மா தாயே.

அலம்பசை தரு.

கேழ்பதென்னவுன்னை ஏற்காதுஎந்தனுக்கு
தாழ்வதுசெய்துவைத்தாயே—குலத்தை
பாழதுசெய்துவைத்தாயே
நலத்தையெல்லாம்விட்டு பலத்தபழியைதொட்ட
நாயேயிதைவிட்டுபோடி

அலம்பசை வசனம்.

அடி உன்னிடம் கேழ்பதென்னவிருக்கிறது குலத்தையே பாழ் செய்த நாயே இத்தருணம் இதைவிட்டு ஓடிப்போவாய்.

லபிலை தரு.

ஓதுவேன் கேளுமம்மா
தாதியும் கூடவந்தாள்
உண்மைதனைக் கேட்டுநீயும்
விட்டைவிட்டு ஓட்டுமே

லபிலை வசனம்.

கேளுமம்மாதாயே நான் நந்தவனம் தனியாகபோகவில்லை தாதியும் கூடவந்தாள் அங்கு நடந்தவைகளைவிசாரித்து உண்மைதெரிந்து என்மீது குற்றமிருந்தால் உன்னிஷ்டபடி என்னவேண்டுமானாலும் செய்யுமம்மாதாயே.

அலம்பசை-கவி-கந்தார்த்தம்.

என்னடி தோழிநீதான் யியம்புவாய் வனத்தில்நீங்கள்
வன்னமாய் மலர்கள்கொய்ய வாருடன் போனபோது
என்னதான் நடந்ததென்று எடுத்துமே யில்லாமல்
நன்னயமாக வங்கு நடந்ததென்ன சொல்லடி-தோழி.

ஞாயமென்னிடம் விள்ளடி
அடர்ந்த நந்தவனத்தில் படர்ந்தமலர்கள்கொய்தீர்
தொடர்ந்தவன் ஆரடி நடந்ததை சொல்லடி

அலம்பசை வசனம்.

அடி தோழி நீங்கள் நந்தவனம்போய்வரும்போது என்ன நடந்தது அதன் உண்மையை என்னிடம் சொல்லடி தோழி.

சற்குணே தரு.

தொடர்ந்தவன் யாருமில்லையே-அங்கு
நடந்ததுமிகு தொல்லையே
நடந்தே மலர்கள்கொய்து தொடர்ந்தேவீட்டுக்குவந்தோம்
தொடர்ந்ததீவினைவந்து படர்ந்ததேதாய்வயற்றில்

சற்குணே வசனம்.

அம்மா நாங்கள் மலர்கள் கொய்துக்கொண்டு வரும்போது எங்களுடன் யாரும் தொடரவில்லை திடீரென்று இவ்விதமாய் நடந்துவிட்டது இது உண்மைதாயே.

அலம்பசை தரு.

சும்மாவந்தலபிலையான்-வயற்றினில்
எம்மாதிரிவந்ததோ-கர்ப்பம்
வம்பானவார்த்தைகள் வளர்த்தாதே என்னிடம்
பெம்மான்சிவனறிய பேசுவாய் நடந்ததை

அலம்பசை வசனம்.

அடி தோழி சும்மாவந்த லபிலையின் வயிற்றில் கர்பம் உண்டானது எவ்விதம் அந்தபரமசிவனறிய நடந்தவைகளை உண்மையாக சொல்லுவாயடி தோழி.

சற்குணை தரு.

சும்மாநான் சொல்லவில்லையே-எந்தன்
அம்மாபொய்யொன்றுமில்லையே
கைம்மாரிதுவென்னவோ முன்னாள்செய்தீவினையோ
பெம்மான்சிவனறிய அம்மாநான்சொல்லுவேன்

சற்குணை வசனம்.

கேளுமம்மாதாயே நான் பொய்யொன்றும் சொல்லவில்லை ஈசன்சாட்சியாக சொல்லுவேன் நடந்தது உண்மையம்மாதாயே.

அலம்பசை தரு.

என்னாளுமில்லாவிந்தையே நீசொல்லு
அன்னாள்வரையில் நொந்தையே
முன்னாளிலெங்குமில்லா மோசமிதுவென்னவோ
மன்னரவரறிந்தால் என்னையும்வைவாரே

அலம்பசை வசனம்

அடி தோழிநீ சொல்வது பெரிய மோசமாயிருக்கிறது இவ்வுலகத்தில் இதுவரையில் நான்கண்டதேயில்லை என்மன்னர்கேட்டால் என்னசொல்வாரோ என்னையும் வைவாரே இதற்கென்னசெய்வேனடி தோழி.

சற்குணை தரு.

சந்தேகம்கொள்ளவேண்டாமே-இதை
விந்தையென்றெண்ணவேண்டுமே
அந்தலபிலையம்மாள் அறியாளேஒருபாவம்
பந்தவினையிதுவோ பாவைநானறியேனே

சற்குணை வசனம்.

கேளுமம்மாதாயே நீ ஒன்றும் சந்தேகப்படவேண்டாம் அந்த லபிலையம்மாள் ஒருவிதகுற்றமும் செய்யவில்லை இது நூதனமாக ஏற்பட்டிருக்கிறது இது உண்மையம்மாதாயே.

அலம்பசை வசனம்.

என்னடிதோழி நீ சொல்வது மிகவும் பிசகு யார்தான் உன்பேச்சை நம்புவார்கள் நான் நம்பிவிட்டாலும் இந்த ஊரிலுள்ளோர் என்ன நினைப்பார்கள் என்நாதர் என்னசொல்லுவார் நான் ஒருக்காலும் நம்பமாட்டேன் போடிபோ.

லபிலை தரு.

நம்பேனென்று சொன்னதாயே
உம்பர்களறியசொல்வேன்
நடந்தது உண்மையம்மா
சும்மாஎங்கள்மேல்சீறி
அம்மாவையவேவேண்டாம்
சூதுஒன்றமில்லையே
பத்திசிவபூசைசெய்ய
நத்தியென்னிடம்சொல்ல
தங்கையாள்தோழியுடனே
சித்தமிககளித்துநான்
சுத்தமலர்கள்கொண்டு
நத்திநான்வரும்வழியில்
மெத்தபிரமைதனைக்கொண்டு
சித்தங்கலங்கவேதான்
பித்தனார்செயலிதுவோ
ஒன்றுமறியேனம்மா
கன்றுமான்தரித்தயீசன்
நன்றென்வாரிந்தவிதியோ

லபிலை வசனம்.

கேளுமம்மாதாயே நான் ஒருபாவமும் அறியேன் யீசன்செயல் இப்படியாகிவிட்டது என்மீதில் கோபிக்கவேண்டாமம்மாதாயே.

அலம்பசை வசனம்.

பேஷ் பேஷ் வெகுநன்றாயிருக்கிறது சண்டாளி நீமெத்தவும் பிசகானகாரியம் செய்துவிட்டு ஈசன் அறிய நான் ஒருபாவமும்செய்யவில்லை என்றுசொல்லுகிறாய் போதும் போதும் நிறுத்தடி உன் பேச்சை யார்தான் நம்புவார்கள்.

அலம்பசை கவி.

சண்டாளிநீமெத்த சதியதுசெய்துவிட்டாய்
பெண்டாளுய்ஒருவனுக்கு பிழையதுநேர்ந்ததாலே
கொண்டாயோயிந்தவித்தை கொப்பெனயேகாவிட்டால்
கண்டாயித்தண்டத்தாலே கடுகெனவடிப்பேன்போடி.

அலம்பசை தரு.

என்னென்றுநினைத்தாயோ நாயே—யிங்கு
எதற்காகவந்தாய்நீ பேயே
சொன்னசொல்லெல்லாம் பொய்யே
சோதிக்காதே என்னைநீயே
முன்னமேசொன்னேன்நான்முகத்தில்விழிக்காதடி என்

ஓதவந்தாய்என்முன்நீயே அதை
உண்மையாய்கொள்வேனோ நாயே
பாதகமென்றெண்ணுமல்நீ
தாதியுடன்கூடிக்கொண்டு
பாவியேஉலகபழியை மேவியேநிலைக்கவைத்தாய் என்

தாதியுனக்குமேலேகள்ளி-அவளை
தயவின்றியிவ்விடம்விட்டுதள்ளி
மேவிஎங்காகிலும்போய்
சேவித்துபிழைப்பீரிங்கு
கூவிகதறினாலும் உன் ஆவிதான்போகுமடி என்

அலம்பசை வசனம்.

அடி தோழி நீயும் அவளுக்குமேல் கள்ளியாகையால் இவ்விடம் இரண்டுபேரும் நிற்கவேண்டாம் இப்போதே எங்கேயாவது போய்பிழைத்துப்போவீர்.

சற்குனை வசனம்.

அம்மாநான் சொல்வது பிசகென்று தாங்கள் என்மீது கோபிக்கிறீர்கள் அப்படி எங்களால் ஒருவிதமான குற்றமுமில்லை கடவுள் செயல் இப்படி இருந்ததம்மா தாயே.

அலம்பசை வசனம்.

அடி தோழி வரன்முறைகெட்டு நடக்கும் உங்களுக்கு கடவுள் என்றபயம் உண்டா எல்லாம் எனக்குதெரியும் என்னெதிரில் நிற்க வேண்டாம் போடிபோ.

பொது வசனம்.

இந்தபிரகாரம் அலம்பசை தோழியும் தர்க்கித்திருக்கும்போது பூசைக்குமலர்கொண்டுவரப்போன லபிலையானவள் வரவில்லை என்று திரணபிந்துமகாரிஷியானவர் ஏதென்றுசொல்லுகிறவிதங்காண்க,

திரணபிந்துமகாரிஷி கவி.

என்னென்றுவறியேனுனே யென்னுடலபிலேதானும்
முன்னமேமலர்கள்கொய்ய மொய்குழல்தாதியோடு
வன்னமாய்போனுளின்னம் வந்துமேசேரவில்லை
பின்னமோநேர்ந்ததோதான் பிழையதைவறிகிலேனே.

திரணபிந்துமகாரிஷி வசனம்.

ஆ ஆ என்னகாரணம்தெரியவில்லையே என் அருமைக்குமாரத்திமலர்கள்கொண்டுவர வனத்திற்குபோனவ ளின்னம் வரவில்லை அதன்காரணம் இன்னதென்று தெரியவில்லை பூசைக்குறியகாலமும் கிட்டிவிட்டது ஆகையால் இனிசும்மாயிருக்கலாகாது அருகாமையில் கிடைக்கும் புஷ்பங்களையாவதுகொண்டு பூசையைநிறைவேற்றி நம்மகளைதேடிப்போவோம் அதுதான்சரி.

திரணபிந்துமகாரிஷி பூசைசெய்தல்.

பூசைமிகவேசெய்வேன்-மலர்கள்கொண்டு
பூசைமிகவேசெய்வேன்

ஆசையுடனே திவ்ய நேசமலர்கள்கொண்டு
கூசாமல்சிவநாமம் பேசாமல்பேசியே பூ

ஏகாட்சரணனே யோகமிகுமானே
வாகாய்மலர்கொண்டு பாகாய்புரிவேன்தொண்டு பூ

அரகரசிவசிவ பரனே உனைநானே
மறவாமலனுதினம் பாவியேதொழுவேனே பூ

தாசன்வெங்கடேசன் சாற்றுமாலையைபாடி
வாசமலர்கள்கொண்டு நேசமாய்உனைதேடி பூ

திரணபிந்துமகாரிஷி வசனம்.

நாம் இன்று சாவதானமாய் பூசைசெய்வதற்கில்லை நம்முடைய அருமைக்குமாரத்தியை தேடிப்பார்க்கவேண்டும் அதினுல்சீக்கிறமாகப்போவோம்.

திரணபிந்துமகாரிஷி தரு.

வீசிமிகவேநடந்தேன்-சிவமந்திரம்
பேசிமிகவேநடந்தேன்

கூசாமலரன்பாதம் பேசிமகளைக்காண
ஆசைமகள்லயிலை மோசம்செய்தாளென வீ

காடுதனைவிட்டு வீடுதனைதொட்டு
கோடுதவாமகள் நாடுவரவில்லையென வீ

கொடியிலில்லம்வந்து படியில்மகளைகண்டார்
துடியிடைதோழியுடன் தொகைமூவரைக்கண்டார் வீ

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அடி அலம்பசை மலர்கள் கொண்டுவரப்போன லபிலேயும் தோழியும் என்னிடம்வராமல் இங்குவந்து உன்னுடன் வார்த்தையாடியிருக்கும்காரணம் என்னபெண்ணே அலம்பசையே.

அலம்பசை வசனம்.

கேளும் சுவாமி இவர்கள் இப்போதுதான்வந்தார்கள் நான் விசாரித்துக்கொண்டிருக்கிறேன் இதற்குள் நீங்களே வந்துவிட்டீர் அவர்களை விசாரித்து தெரிந்துக்கொள்வீர் சுவாமி.

திரணபிந்துமகாரிஷி கவி.

என்னரும்மகளேகேளாய் எழிலுடன்மலர்கள்கொய்ய
பன்னரும்பணிகள்பூண்ட பாவையாள்தோழியோடு
நன்னரும்வனத்திற்சென்று நலமுடன்வராமலிங்கு
சொன்னமாய்வந்ததேது

சொல்லுவாயம்மா-அதன்விபரம்
விள்ளுவாயம்மா
சொல்லுவாய்தோழியுடன் சுகமாய்வனமேசென்று
நல்லமலர்கள்கொண்டு தொல்லையகற்றுவிதம் சொ

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளுமம்மா லபிலேயே நீ தோழியுடன் வனம்சென்று மலர்கள் கொண்டுவந்து பூசையை நிறைவேற்றுமல் இவ்விடம்வந்தகாரணம் என்னவென்று சொல்லுவாயம்மா லபிலேயே.

லபிலே தரு.

சொல்லுவேன் தந்தை-நடந்ததை
விள்ளுவேன்விந்தை
சொல்லுவேன்தோழியுடன் சுருக்காய்வனம்சென்றேன்
நல்லமலர்க்கொய்து நாங்களும்வரும்போது

லபிலே வசனம்.

கேளும்தந்தையே நான் தோழியுடன் வனம்சென்று மலர்கள் கொண்டுவரும்போது நடந்ததை என்னென்றுசொல்வேன் தந்தையே.

திரணபிந்துமகாரிஷி தரு.

என்னகாரணமோ-இங்குவந்தது
ஏதுகாரணமோ
என்னகாரணமாக இருவரும் இங்குவந்தீர்
பின்னமில்லாமலே பேசுவீரென்னிடம்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அடிதோழி நீ இங்குவா வனத்தில் நடந்தவைகளை ஒன்றும் ஒளிக்காமல் சொல்லுவாய்பார்ப்போம்.

சற்குணை வசனம்.

சுவாமி நான் உண்மையாக சொல்லுகிறேன் நாங்கள் மலர்கள் கொய்துவரும்போது முன்னதாகவே லபிலையம்மன் வந்துக்கொண்டிருந்தாள் நான்பின்னுடியேவந்தேன் திடீரென்று லபிலைக்குகெர்பம் உண்டாகிவிட்டது இதுசத்தியம் சுவாமி.

திரணபிந்துமகாரிஷி கவி.

திங்களைத்தரித்தயீசா உன்திருவடிஎந்நாளும்
பொங்கமாய்பூசித்தேனே புதுமையாயின்றுவந்த
யங்கமேயறியநானும் பதைக்குதேமெந்தனுள்ளம்
தங்கமேயெனக்கறிய தயவுடனியம்புவாயே.

திரணபிந்துமகாரிஷி வசனம்.

ஓ ஜெகதீசா நான் உண்மையில் உன் திருவடியில் அடைந்தவன் எனக்கு என்றுமில்லாத பங்கமேற்பட்டிருப்பதால் அதைநீக்கி என்னையாண்டருளுமையா சுவாமி.

பொது வசனம்.

இவ்விதமாக திரணபிந்துமகாரிஷியானவர்மனதில் அதிகக்லேசமுற்று சிவத்தியானத்திலிருந்து தான் ஞானக்கண்ணினால் நோக்கி நடந்தவிஷயங்களை தெரிந்துக்கொண்டு தன்மனையாளுக்கு சமாதானம் கூறும்விதங்காண்க.

திரணபிந்துமகாரிஷி வசனம்.

பெண்ணே அலம்பசை நடந்தவிஷயங்களெல்லாம் நான்தெரிந்துக்கொண்டேன் நம்மகள்மேல்குற்றமில்லை தவத்தில்மகிமையுள்ள புலத்தியமகாரிஷியின்சாபத்தால் ஏற்பட்டதே ஒழிய வேறொன்றுமில்லை ஆகையால் இனிநடக்கவேண்டியவைகளை கவனிக்கவேண்டும்.

அலம்பசை வசனம்.

கேளும்நாதா புலத்தியருடையசாபம் நமக்கேன்வரும் கர்பம் எப்படி உண்டாகும் இதெல்லாம் எப்படிநம்புவது சொல்லுமையா சுவாமி.

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளும்பெண்ணே நடந்தவைகளை சொல்லிவருகிறேன்.

சுசீலை வசனம்.

ஆனால் எனக்கு விபரமாய் சொல்லுவீர் சுவாமி.

திரணபிந்துமகாரிஷி தரு.

கோபமிகக்கொள்ளவேண்டாமே-நம்லபிலேமேல்
சோபமிகவிள்ளவேண்டாமே
கோபமேகொள்ளவேண்டாம் பாபமிகவுண்டாகும்
தாபமேவிட்டுநீ தயவுடன்கேழ்பாயே

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளும்பெண்ணே அலம்பசை நம்மகள்மேல் கோபிக்காமல் கேட்டுவருவாய்,

அலம்பசை தரு.

கோபமதனைவிட்டேனே-நீசொல்வதாய்
சாபமதனைகேட்பேனே
கோபமதனைவிட்டேன் சாபம்தன்னையேநீயும்
தாமதமில்லாமலே தயவுடன்சொல்வீரே

அலம்பசை வசனம்.

கேளும்சுவாமி உம்மால் கோபமென்பதைவிட்டேன் நடந்த விஷயத்தை சொல்லுவீர்.

திரணபிந்துமகாரிஷி தரு.

முந்திபுலத்தியனுமே-பிரமனேநோக்கி
பந்தியாய்தபமும்செய்யவே
இந்திரனதையறிந்து தந்திரங்களைசெய்து
சந்தோஷமாகவே சதிசெய்யநினைத்தானே

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளும்பெண்ணே புலத்தியமகாரிஷி என்பவர் மகாதபங்கள் செய்திருந்தார் அதை இந்திரனறிந்து நடனமாதர்களையேவி தந்திரத்தால் தபத்தைகலைக்க எத்தனித்தான்.

அலம்பசை தரு.

சதிசெய்தால்இந்திரனும்-நமக்கென்ன
விதிசெய்தார்சுந்திரனும்
சதியவன்செய்தாலே பதியேநமக்கென்ன
விதியோமகளுக்கு கதியிப்படியாச்சே

கேளும்சுவாமி இந்திரன்தபத்தை கெடுத்தால் நமக்கென்ன மகளுக்குவன் இந்தகதிவரவேண்டும் சொல்லுமையாசுவாமி.

திரணபிந்துமகாரிஷி தரு.

தபத்தைஎல்லாம்கெடுக்கவே-நடனமாதர்
பவத்தைஎல்லாம்தொடுக்கவே
கோபமதுபெருகி சாபமதையிட்டாரே
சோபமாய்கர்பமே அடையவனமேவந்தால்

கேளும்பெண்ணே அலம்பசை இந்திரனல் ஏவப்பட்ட நடன மாதர்கள் தொந்தரவால் அவர்களை விறட்டி துரத்திவிட்டு இனி இந்த அத்துக்குள்யார்வந்தாலும் கர்பம் அடையவேண்டியதுஎன்று சாபம்கொடுத்துவிட்டு பழயபடி தபத்தில்உட்கார்ந்துவிட்டார் அந்த அத்துதெரியாமல் நம்மகள்வந்துவிட்டபடியால் இப்படி நடந்துவிட்டதடி பெண்ணே அலம்பசையே.

அலம்பசை தரு.

இதற்கென்னசெய்குவோம் சுவாமி
எனக்கதைஓதுவீர்நேமி
பதைக்குதேஎந்தனுள்ளம் பாவிநான்என்னசெய்வேன்
புதைக்கிறபொருளல்ல புண்ணியாதெரிகுவீர்

கேளும்சுவாமி இவ்விதமாக நடந்துவிட்டது இதுமறைவாக இருக்கும்பொருளல்ல இதற்கு தகுந்தயோசனை செய்யவேண்டும்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளும்பெண்ணே நாம் இவ்விடத்தில் இருந்தால் ஒன்றும் நடவாது அந்தபுலத்தியருடைய தபச்சாலைக்குபோய் அவருக்கே நம் பெண்ணை கலியாணம் செய்துவைப்போம் வாருங்கள்.

திரணபிந்துமகாரிஷி-தரு.

செல்லுவோம்வாரீர்-எல்லோரும்கூடி
செல்லுவோம்வாரீர்
செல்லுவோம்நாமுமந்த வல்லவன் தபம்செய்யும்
நல்லவனமதில்போய் ஞாயங்களறிந்திட செ
அருமைஎனதுசெல்வி பெருமையைவிட்டுமே
சிறுமைபடவந்த திறமையதையறிய செ
உலகபழியொழிக்க நலமேமிகசெழிக்க
எல்லோரும்கூடியே ஏகமனதாய்சென்று
வல்லவன் தாளினை வணங்கியேபூசிக்க செ

திரணபிந்துமகாரிஷி வசனம்.

வந்துவிட்டோம் நீங்கள் எல்லாரும் ஒருபுரமாயிருங்கள் நான் போய் அவர் அபிப்பிராயத்தை தெரிந்துவருகிறேன்.

பொ-வ—இவ்விதமாக திரணபிந்துமகாரிஷியானவர் தன்னோடுவந்தவர்களை தனியேவிட்டு புலத்தியரிடம்வந்து ஏதென்று சொல்லுகிறவிதங் காண்க.

திரணபிந்துமகாரிஷி கவி.

தவமதில்புகழ்பெற்ற தபசியேயடியேன்நானும்
பவமதையொழிக்கவாவி யடைந்துமேபூசைசெய்ய
நவவிதபணிகள்பூண்ட நங்கையாம்லபிலைதன்னை
புவமதிலனுப்பிவைத்து புகழையும்கைவிட்டேனே.

திரணபிந்துமகாரிஷி தரு.

வந்தனம்தந்திட்டேன்சுவாமி-நான்
சிந்தையதனைதொட்டேன்நேமி

நந்தவனத்திலே வந்தாள்எனதுமகள்
பந்தவிணையதுவோ நொந்துமேவாடவைத்தீர்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளுமையா புலத்தியமகாரிஷியே நான்சிவபூசைசெய்ய என் மகள் லவிலையை நந்தவனம் அனுப்பினேன் மலர்கள் பறித்துக்கொண்டு திரும்பிவரும்போது தங்கள் தபச்சாலண்டைவந்ததும் கர்பமடைந்து தவிக்கிறது அதை நிவர்த்திசெய்யுமையாசுவாமி.

புலத்தியர் தரு.

எந்தவூர்எந்தநாடு அய்யா—நீர்
எங்கிருந்துயிங்குவந்தீர் துய்யா
வந்தகாரணமென்ன நொந்துஏனவாடுகிறீர்
சந்தோஷமாகநீரும் விந்தையதனைகூறும்

புலத்தியர் வசனம்.

கேளுமையாமுனிவரே நீர் எந்தவூர் எதற்காக இங்குவந்தீர் வந்ததன்றியும் மிகவும்நொந்துவாடும்காரணம் என்ன அதன்விபரம் சொல்லுமையாசுவாமி.

திரணபிந்துமகாரிஷி தரு.

விந்தையைஎன்னசொல்வேன்நாதா—அது
வந்ததேஎங்களுக்குபோதா
சந்தேகம்கொள்ளவேண்டாம் சடுதியில்நான்சொல்வேன்
நந்தவனத்தில்மகள் வந்துகர்பம்ஆனுளே

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளுமையா சுவாமி என்மகள் பூசைக்கு மலர்வேண்டி நந்தவனம்வந்தாள் உம்முடையதபச்சாலைக்கருகாமையில்வந்ததும் கர்பம் அடைந்துவிட்டாள் அதை எப்படியாவது காருமையாசுவாமி.

புலத்தியர் கவி.

என்னிடம்வந்தஅய்யா யியம்புவேன்கேளீர்நீரும்
முன்னிடதபமேசெய்தேன் மொய்குழல்தாசிமாரும்
என்னிடதபத்தைபங்கம் இயல்புடன்செய்யவந்தார்
பின்னிடநானும்சாபம் பெரிதுமேயிட்டேனையா.

புலத்தியர் வசனம்.

கேளுமையா சிவபத்தரே நான்மோட்சத்தைநாடி தபம்செய்தேன் அதைபங்கம்செய்ய அரம்பாஸ்திரிகள் எண்ணங்கொண்டு என்னிடம்வந்து பலவிதத்திலும் என்னை தொந்தரவுசெய்தார்கள் அதனல் எனக்கு கோபமுண்டாகி என்தபச்சாலைக்குஒரு அத்துண்டாக்கி அதற்குள் யார்வந்தாலும் கர்பம் அடையவேண்டியதென்று சபித்தேன் அந்த அத்துக்குள் உன்மகள்வந்திருக்கலாம் அதனல் கர்பம் அடைந்திருந்தால் நானென்னசெய்வேன்சுவாமி.

திரணபிந்துமகாரிஷி தரு.

எப்படியும்காருமையா-உம்மைநான்
கைப்பிடியாய்ப்பிடிப்பேனையா
எப்படியும்என்மகளை ஒப்பியேமணமதுநீ
தப்பிதம்வாராமலே சாமிநீசெய்துகொள்ளும்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளுமையா தபசியே என்மகள் கர்பமடைந்தது உம்மாலே யாகையால நீரே அந்தபெண்ணை மணம்செய்துகொள்ளும் சுவாமி.

புலத்தியர் தரு.

இல்லறமென்பதேவேண்டேன்-இது
நல்லறமிதைவிட்டுதாண்டேன்
இல்லறவாழ்கையில் இடறதுமெத்தவுண்டு
வல்லவன்பாதமதில் வகையாய்புரிவேன்தொண்டு

புலத்தியர் வசனம்.

கேளுமையா பெரியவரே இல்லறவாழ்கை என்பதே என்னிடம் சொல்லவேண்டாம் துறவறத்தைவிட்டு நான்வரவுமாட்டேன் போய் வாருமையாசுவாமி.

திரணபிந்துமகாரிஷி தரு.

ஆமோஅப்படிசொல்ல-நீரும்
போமோஉமதுமேன்மைகூறும்
ஓ ஓ உம்மையல்லாது ஒருவரும்துணையில்லை
போவோம்கமதுயில்லம் புகழ்வதன்மேலில்லை

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அய்யா தபசியே நீர் அப்படி சொல்வது தகாது எங்களுக்கு வேறொருவரும் துணையில்லை நீர் என்மகளை மணம்செய்துக்கொண்டால் நல்லபுகழ்உண்டு உமது மேன்மை குறையாது எப்படியாவது தயவுசெய்து மணம்செய்துக்கொள்ளுமையா சுவாமி.

புலத்தியர் தரு.

உத்தமரேசொல்வேன்கேளும்-அதை
சித்தமதில்சற்றுநீரும்
புத்தியதுகெட்டு போகும்மிகுதொல்லை
சத்தியமாகசொன்னேன் சம்மதமெனக்கில்லை

புலத்தியர் வசனம்.

கேளுமையா உத்தமரே கலியாணம்செய்துக்கொண்டால் புத்தி கெட்டுவிடும் அது எனக்குசம்மதமில்லை நீர்போய்வாருமையாசுவாமி

திரணபிந்துமகாரிஷி தரு.

அய்யனேநான்சொல்வேன் கேளும்
பைய்யவேயதனையேநீரும்
துய்யாதுறவறத்தில் மெய்யாயில்லறமேலே
நைய்யாமனதுடனே அய்யாயிருப்பதேதேனு

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அய்யா தபசியேதுறவறத்தைவிட இல்லறமேலானது நீர்தயவு செய்து என்மகளை மணம்செய்துக்கொள்ளுமையா சுவாமி.

புலத்தியர் தரு

முடியாதுமுடியாதுவேண்டேன்-அது
படியாதுமனைவாழ்கைதுண்டேன்
முடியாதுஎன்னாலே மோசம்வரும்பின்னாலே
படியநீசொன்னாலே இடியுமோஎன்மனம்

புலத்தியர் வசனம்.

அய்யாபெரியவரே இல்வாழ்க்கை என்பதே எனக்குவேண்டிய தில்லை சமுசாரம் சாகரமென்பார்கள் அதைநீந்திக் கரையேருவதெ ன்றால் எளிதல்ல, பிணிக்குமருந்து பிரமணனி யிழைதன் னோய்க்கு தானே மருந்து என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர் வாத பித்தசிலேத்துமமென்கிற பிணிகளுக்கு அதற்கு விரோதமான குண த்தையுடையனவே மருந்தாகிறது ஆபரணத்தா லலங்கரிக்கப்பட்ட மாதர்களால் உண்டாகும் பிணிகளுக்குபிறரும் அதை விருத்திசெய் யக்கூடியதானே மருந்தாகிறார்கள் அதுவுந்தவிற,

'சேய்கொண்டாருங்கமல செம்மலுடனேயரவ
பாய்கொண்டானும்பணியும் பட்டசுரத்தானே
நோய்கொண்டாலும்கொளலாம் நாறுவயதாமளவும்
பேய்கொண்டாலும்கொளலாம் பெண்கொள்ளவாகாதே'

என்றுசொல்லியிருக்கிறது நீர் என்னிடம் இல்வாழ்கை என்பதே சொல்லவேண்டாமையா சுவாமி

திரணபிந்துமகாரிஷி தரு.

காலமெல்லாமிழிவுஆச்சே- இந்த
கோலம்வரவும்புகழ்போச்சே
சாலதவமேசெய்யும் கோலதவமுனியே
ஞாலமதிலென்னையும் மேலாகமொள்ளும்நீயும்

திரணபிந்துமகாரிஷி வசனம்,

அய்யா தபசியே காலமெல்லாம் இழிவானபேர் உண்டாகிவிட் டது என்னை அதனின்றும் காப்பாற்றவேண்டுமையா சுவாமி.

புலத்தியர் தரு.

என்னாலேயாவதுஏது—அதை
முன்னாலேநீஎனக்குஓது
சொன்னாலேஉமக்கிது அண்ணாலேதெரியவில்லை
பின்னாலேவருவதை முன்னாலேசொல்லுகிறேன்

புலத்தியர் வசனம்.

அய்யா பெரியவரே கலியாணம்தவிற வேறேதென்னால் ஆவதிரு ந்தால் சொல்லும் கலியாணம்செய்தால் பின்னால் அதிக கஷ்டங்கள் உண்டாகும் அதைசொன்னேனையா சுவாமி,

திரணபிந்துமகாரிஷி தரு.

என்மகள்லபிலையைநீரும்—வந்து
பொன்மணம்முடிக்கவேவேணும்
கண்ணானஎன்மகள் கதறியேதுடிக்கிறாள்
மின்னுளைபழிக்கவே மோசமேசெய்யாதீர்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அம்யாதபசியே மிகவும்துடிக்கும் என்மகளைகலியாணம்செய்து எங்களை ரட்சிக்கவேண்டியது உமதுபாரமையா சுவாமி.

புலத்தியர் தரு.

அய்யய்யோஅதுமெத்ததொல்லை—அதில்
செல்லஎனக்குமனமில்லை
கலியாணமென்பது சனியன்துடர்வது
புலியானபுருஷனும் எலியாகபோவானே

புலத்தியர் வசனம்.

அய்யாபெரியவரே கலியாணம்செய்துக்கொண்டால் புலியைப் போல்வீரமுடையபுருஷனானாலும் எலியைப்போல் ஆய்விடுவான் அதுதவிற வேறு எதையாவது சொல்லுமையா சுவாமி.

திரணபிந்துமகாரிஷி தரு.

இப்படிநீர்சொன்னால்நானே—இனி
எப்படிவாழ்வேனுலகில்தானே
சொற்படிநீர்கேட்டு சொந்தமகளையும்
சற்பனையில்லாமல் சடுதியில்மணம்செய்யும்

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அய்யாதபசியே நீர் அப்படிசொன்னால் நான் இந்த அபவாதத் துடன் எப்படிவாழ்வேன் உலகில் சொல்லுமையா சுவாமி.

புலத்தியர் தரு.

என்மேல்வருத்தம்வேண்டாம் அய்யா-நான்
பெண்மேல்கருத்தும்வேண்டேன் துய்யா
மண்ணில்மெத்தபேர்கள் பெண்ணாலேகெட்டார்கள்
புண்ணியம்உமக்குண்டு பெண்ணதுவேண்டாமே

புலத்தியர் வசனம்.

அய்யாபெரியவரே நீர் என்மேல் வருத்தபடவேண்டாம் இல் லறமென்பதைவிட்டு வேறு எதையாவது சொல்துமையா சுவாமி.

திரணபிந்துமகாரிஷி கவி.

எத்தனைவிதத்திலும்மை யிரங்கிநான்கேட்டுமையா
சித்தமேயிரங்கிசற்றும் செல்வனேஎனக்குநல்ல
யுத்தமாய்வார்த்தைசொல்லி உணர்வதுநிலைக்கசெய்வாய்
சுத்தனேஉமதுபாரம் சுருக்கினில்அபயம்தாராய்.

திரணபிந்துமகாரிஷி வசனம்.

கேளுமையா தபசியே நான் எத்தனைவிதத்திலும்மை மன்றுடி கேட்டும்உன்மனமானது இரங்கவில்லைநான் உன்னைவந்தடைந்தேன் எனக்கு அபயம்தாருமையா சுவாமி.

புலத்தியர் கவி.

என்னமோயீசாகாணேன் இடரதுவரவுமாச்சு
முன்னமேநடனமாதர் மோசமாய்தபமேவெல்ல
வண்ணமாய்வநதார்சாபம் வகையுடனிட்டேனுனும்
பின்னமாய்லபிலைகர்பம் பெற்றதால்மோசமாச்சே.

புலத்தியர் வசனம்.

என்னசெய்வேன் ஈசா எல்லாம் உன்னருள்தான் நான்தபம் செய்வதை நடனமாதர்கலைக்க நான்சாபமிட லபிலையானவள் அந்த வழிவந்ததால் சாபத்தையடைய அவள்தந்தையானவர்என்னை அபய மென அடைந்தார் இதற்கென்னசெய்வேன் சுவாமி.

பொது வசனம்.

இவ்விதமாக திரணபிந்துமகாரிஷிக்கு அபயம்தந்து கடவுளை நொந்து அவர் இஷ்டபடியே லபிலையை கலியாணம்செய்துக்கொள்வதாய் சம்மதப்பட்டு ஏதென்றுசொல்லுகிறவிதங்காண்க.

புலத்தியர் வசனம்.

அய்யாபெரியவரே உமதிஷ்டபடியே தங்கள் குமாரத்தியை நான் விவாகம்செய்துக்கொள்ளுகிறேன் நீர்வருத்தப்படவேண்டாமையா சுவாமி.

திரணபிந்துமகாரிஷி வசனம்.

அய்யா தபசியே நீர்யார்வந்தாலும் கர்பமடையவேண்டியதென்று சபித்தசாபத்தை நிவர்த்திசெய்யுமையா தபசியே.

புல-வ-ம். அப்படியேஉம்மிஷ்டபடி சாபத்தைநீக்கிவிட்டேன்சுவாமி

திர-வ-ம். அடீ அலம்பசையே அம்மாலபிலையே அருகாமைவாருங்கள்.

புல-வ-ம். ஏன்மாமாவே கலியாணத்திற்கு வேண்டியவைகளை ரம்செய்யலாமே.

திர-வ-ம். உடனே எல்லாம்சித்தமாகட்டும்.

புல-வ-ம். அடாசீடர்களே கலியாணத்திற்குவேண்டிய சாமான் எல்லாம். சித்தமாகட்டும்.

சீட-வ-ம். எல்லாம் சித்தமாகவிருக்கிறதுசுவாமி.

புலத்தியருக்கும் லபிலைக்கும் கலியாணம்

கலியாணம்செய்தாரே-லபிலைக்கு
கலியாணம்செய்தாரே
கலியாணம்செய்தாரே　　சலியாமனதுடனே
புரியாணவீரமுடைய　　புலத்தியர்தனக்கு

முத்தால்பந்தலுமிட்டார்-அதை
சுத்திதோரணம்தொட்டார்
மங்களவாத்தியம்　　எங்கும்முழங்கவே
பொங்கமாய்மறையவர்　　சங்கியேகோஷிக்க　கஎ

அம்பிலமாக-இருவரும்
அரசாணிமுன்பாக
தக்கபந்துகளுடன்　　மிக்கதேவர்கள்காண
பக்கமதில்மாதர்கள்　　சிக்கவாலாத்திசோண　கஎ

மகத்துவபுலத்தியரும்-அந்த
சுகத்துடன்லபிலைக்கு
பொங்கமதாகவே　　மாங்கல்யம்சூட்ட
இங்கிதமாகவே　　இருவரும்வாழ்ந்திட　கஎ

வந்தவர்தான்களிக்க-நல்ல
வகையுடன்போசனம் தான்சுகிக்க
அந்தரம்தனிலுள்ள　　விந்தைதபணிகள்பூண்ட
சுந்தரமாதர்கள்　　வந்துமேநடத்திட

...ம். இவ்விதமாக லபிலைக்கும் புலத்தியருக்கும்விவாகம்நட... அவரவர்க ளிருப்பிடம்போய் சுகமாக வாழ்ந்துவருகி... சுபம்! சுபம் !!

வாழி.

...ராமசந்திரனுக்குஜெயமங்களம்
...பிராமனுக்கு திவ்யகுணமங்களம்
...சௌந்தரர்க்கு ஐங்கரர்க்கும்மங்களம்
...ாயுதமுடைய வித்தகர்க்கும்மங்களம்
...பண்டைநூலைக்கற்ற மேலோர்கள்தாளினை
...க்கியோன் தண்டம்செய்தேன் திவ்யபாதம்வந்தனம்.

முற்றிற்று.